AHARAM

அகரம்

தரம் 5 - II வரை

எண்: 07 எழுத்து: 05 மே 2013

www.aharam.lk

மாதாந்த சிறுவர் சஞ்சிகை 40/-

Des: Deltota Harees

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்: 07 மே, 2013 எழுத்து: 06

PUBLIC LIBRARY
JAFFNA

உள்ளே...

மாணவர்களின் ஆளுமையும் கற்றல் வழிமுறைகளும் 26



புதிது புதிதாகத் திட்டம் போடுங்கள் 21

15

World Today 12

சர்வதேச தாதியர் தினம் 25

38

08

பாடத்திட்டம்

கணிதம்	32	தமிழ்	29
விஞ்ஞானம்	35	புலமைப் பரிசில்	39

பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, முன்னாள் தேசிய கல்வி நிறுவகம்)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324
பெக்ஸ்: 011 2686030
E-Mail: *editor@aharam.lk*
www.aharam.lk

சந்தா விபரம்
தனிப் பிரதி 40 /-
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்ஸலாமு அலைக்கும் தம்பி தங்கைகளே!

உங்களது முதலாம் தவணைப் பரீட்சைப் பெறுபேறுகளைச் சற்று சீர்தூக்கிப் பாருங்கள். அவை திருப்தி தருவனவாக அமைந்துள்ளனவா? அவ்வந்தப் பாடங்களில் நீங்கள் பெற்றுக் கொண்டிருக்கும் புள்ளிகள் உங்களது இலக்கை நீங்கள் அடைந்திருப்பதற்கான சான்றுகளாக இருக்கின்றனவா?

உங்கள் ஒவ்வொருவரினதும் குறுங்கால இலக்கு பரீட்சைப் பெறுபேறாக 100% புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதுதான். பெரும்பாலானவர்களுக்கு இது சாத்தியப்பட்டிருக்காது. அவ்வாறாயின் நூறு வீத அடைவு என்பது எப்போதும் கனவுதானா?

இல்லை. 100 புள்ளிகள் என்பது சாத்தியமற்ற ஓர் இலக்கு அல்ல. ஒவ்வொரு பாடத்திலும் உரிய பாடப் பரப்புக்கு அப்பால் வினாக்கள் கேட்கப்படுவது மிக அரிதாகும். எனவே, பாடப் பரப்பை உரிய முறையில் கிரமமாகக் கற்றுப் பூரணப்படுத்துவதில் நீங்கள் அசிரத்தையாக இருந்திருக்கலாம். அல்லது வினாக்களை நீங்கள் புரிந்துகொண்ட விதத்தில் தவறு இருக்கலாம். அல்லது வினாக்களுக்குரிய விடை தெரிந்திருந்தும் அதனை உரிய முறையில் முன்வைப்பதில் நீங்கள் பிழை விட்டிருக்கலாம்.

இவை அல்லாது இன்னுமொரு விடயமும் இருக்கின்றது. கற்பதன் நோக்கம் அறிவைத் தேடுவதாகும். ஆனால், கற்றிருக்கின்றோம் என்பதன் குறிகாட்டி பரீட்சைப் பெறுபேறாகும். பாடப் பரப்பை அறிவைப் பெற்றுக் கொள்வதற்காகக் கற்பது என்பதும், அதனைக் கொண்டு பரீட்சைக்குத் தயாராவது என்பதும் இரு வேறுபட்ட விடயங்கள். பாடப்பரப்பை கற்று விட்டோம் என்பதனால் பரீட்சை சாதகமாக அமையும் என எதிர்பார்க்க முடியாது. அவ்வாறே பாடப்பரப்பை பூரணப்படுத்தாமல் பரீட்சைக்கு மட்டும் தயாராவது என்பதும் பரீட்சை முடிவுகளைச் சாதகமாக ஆக்கித் தரமாட்டாது என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, இப்போது நீங்கள் செய்ய வேண்டியது என்ன? நீங்கள் ஒரு போட்டியில் இறங்க வேண்டும். பொதுவாக போட்டி என்பது தன்னைவிட முன்னால் செல்பவருடன்தான் ஏற்படும். மேலும், போட்டி என்று வருகின்ற போது கூடவே பொறாமையும் சூழ்ச்சிகளும் தொற்றிக் கொள்வதுண்டு. கூடவே மன அழுத்தம், தோல்வியில் விரக்தி, வெற்றியில் மமதை என்பனவும் சேர்ந்துகொள்ளும். இவை இழிபண்புகளாகும்.

ஆனால், இது ஒருவித்தியாசமான போட்டி. இதில் நீங்கள் இன்னொருவருடன் போட்டிபோடப் போவதில்லை. நீங்கள் உங்களுடன்தான் போட்டி போடப் போகின்றீர்கள். அதாவது முதலாம் தவணைப் பரீட்சையில் நீங்கள் பெற்றுக் கொண்ட புள்ளி 75 என்று வைத்துக் கொள்ளுங்கள். இப்போது முதலாம் தவணையில் 75 புள்ளி எடுத்த உங்களுக்கும் இரண்டாம் தவணைப் பரீட்சை எழுதப் போகின்ற உங்களுக்கும் போட்டி. நீங்கள் வெற்றியாளராக ஆவதென்றால் இரண்டாம் தவணைப் பரீட்சையில் 75க்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றாக வேண்டும்.

இந்தப் போட்டியில் இழிகுணங்கள் தொற்றிக் கொள்ளா. திட்டமிடுதல், தவறுகளைத் திருத்துதல். புதிய வழிமுறைகளைக் கையாளுதல், முயற்சி செய்தல், அர்ப்பணிப்புடன் ஈடுபடுதல் போன்ற உயர் பண்புகள் இங்கே அரசோச்சும். இந்தப் பயிற்சிகள் பிற்காலத்தில் உங்கள் வாழ்க்கையில் வெற்றிகளை கொண்டுதரும், சமூகத்தில் ஏனைய விடயங்களிலும் உயர் விழுமியங்களுடன் திகழும் ஒரு நற்பிரஜையாக உங்களை உருவாக்கும். உங்களுக்கும், உங்களது பெற்றோருக்கும், உங்களது குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் நற்பெயரையும் அந்தஸ்த்தையும் கொண்டுதரும்.

வெற்றிக்கு நமது முயற்சிகளும் அர்ப்பணிப்புக்களும் மாத்திரம் காரணமாக அமைவதில்லை. அல்லாஹுத் தஆலாவின் அருளும் அடிப்படையான ஒரு காரணியாகும். அவனது அருள் எப்போது எமக்குக் கிட்டும்? நமது முயற்சியோடு, அல்லாஹ்வைச் சார்ந்திருத்தல் அவனது அருளை நமக்குப் பெற்றுத் தரும். அத்தோடு நமது பெற்றோர், ஆசிரியர்கள், மூத்தவர்களின் துஆக்களும் அல்லாஹ்வின் அருளை நமக்குப் பெற்றுத் தரும்.

எனவே, இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு இரண்டாம் தவணையை தொடருங்கள். இன்ஷா அல்லாஹ் வெற்றி மிக அண்மையில் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அற்புதம் அல்குர்ஆன்

அல்குர்ஆன் கூறும் கதைகள்

மத்யன்வாசிகளின் சகோதரர்

ஷுஐப் (அலைஹிஸ்ஸலாம்)

சென்ற இதழ் தொடர்...

மேலும், என் சமூகத்தினரே! என்னோடு நீங்கள் கொண்டுள்ள பிணக்கும் பகைமையும் - நூஹுடைய சமுதாயத்தினரை அல்லது ஹூத் மற்றும் ஸாலிஹ் உடைய சமுதாயத்தினரைப் பீடித்தது போன்ற வேதனையில் உங்களையும் கொண்டு போய்ச் சேர்த்து விடக் கூடாது. மேலும், லூத் சமூகத்தினரோ உங்களிலிருந்து காலத்தால் வெகு தூரத்தில் இல்லை. எனவே, உங்கள் இறைவனிடம் மன்னிப்புக் கோருங்கள்! பிறகு அவன் பக்கமே மீளுங்கள். திண்ணமாக என் இறைவன் கருணை பொழிபவனாகவும் (தன் படைப்பினங்கள் மீது) பேரன்பு கொண்டவனாகவும் இருக்கின்றான்."

அதற்கு அவர்கள் தந்த பதில்: "ஷுஐபே! நீர் கூறுகின்ற பெரும்பாலான விஷயங்கள் எங்களுக்குப் புரிவதில்லை. மேலும், எங்களுக்கிடையே நீர் வலிமை குன்றியவராக இருப்பதைத்தான் நாங்கள் காண்கிறோம். உம்முடைய குடும்பத்தார் இல்லையென்றால், எப்பொழுதோ உம்மைக் கல்லெறிந்து கொன்றிருப்போம்! மேலும், (நாங்கள் உம்மை மதிக்கும் அளவுக்கு) நீர் எங்களிடையே வலிமை உடையவர் அல்லர்!"

ஷுஐப் கூறினார்: "என் சமுதாயத்தினரே! அல்லாஹ்வை விட என்னுடைய குடும்பத்தார்களையா அதிக வலிமையுள்ளவர்களாக நீங்கள் கருதுகிறீர்கள்? (என்னுடைய குடும்பத்தாருக்கு அஞ்சுகின்றீர்கள்; ஆனால்) அல்லாஹ்வை அலட்சியமாகப் புறக்கணித்து விட்டீர்கள்! திண்ணமாக என்னுடைய அதிபதி நீங்கள் செய்கின்றவற்றைச் சூழ்ந்தறிந்தவனாக இருக்கின்றான். என் சமூகத்தினரே! நீங்கள் உங்கள் வழியில் செயல்பட்டுக் கொண்டிருங்கள்; நான் (எனது வழியில்) செயல்பட்டுக் கொண்டிருப்பேன். இழிவுறுத்தும் வேதனை யாரை வந்தடையும் என்பதையும் யார் பொய் உரைக்கிறார் என்பதையும் விரைவில் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். எனவே, நீங்களும் எதிர்பார்த்துக் கொண்டிருங்கள். நானும் உங்களுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்!"

இறுதியில், நமது கட்டளைக்குரிய நேரம் வந்து விட்டது. அப்போது நமது அருளால் ஷுஐபையும் அவருடைய நம்பிக்கை கொண்ட தோழர்களையும் காப்பாற்றினோம். மேலும், அக்கிரமம் செய்தவர்களை ஒரு பயங்கரமான ஓசை தாக்கியது. அவர்கள் தம் ஊர்களில் தலைக்குப்புற வீழ்ந்து மடிந்தனர். அங்கு அவர்கள் வாழ்ந்த அடையாளமே இல்லாதது போல. தெரிந்து கொள்ளுங்கள், இறையருளிலிருந்து மத்யன் வாசிகளும் தூக்கி எறியப்பட்டார்கள், ஸமூத் இனத்தார் தூக்கி எறியப்பட்டது போன்று.

இது ஸூரா ஹூதின் 84ஆவது வசனம் முதல் 95 வது வசனம் வரையில் நபி ஷுஐப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தொடர்பாகவும் மத்யன் வாசிகளின் நிலை குறித்தும் எடுத்துரைக்கும் பகுதியாகும்.

ஸூரத்துல் அஃராபின் 85ஆவது வசனம் முதல் 93ஆவது வசனம் வரையில் நபி ஷுஐப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது வரலாறு மீட்டப்படுவதைப் பார்க்கலாம். மனித சமூகத்தை ஆணவமும் கர்வமும் சுயநலமும் கொண்ட தலைமைகள் தாம் வழிகெடுக்கின்றன என்ற தெளிவான உண்மையை அல்லாஹ் இங்கு திருப்பித் திருப்பி உறுதிப்படுத்துவதை நம்மால் அறிய முடிகின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)

عَنْ أَنَسٍ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ
لا يُؤْمِنُ أَحَدُكُمْ حَتَّى يُحِبَّ لأَخِيهِ مَا يُحِبُّ لِنَفْسِهِ (صَحِيحُ الْبُخَارِي)

அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"தான் விரும்புவதை தனது சகோதரனுக்கும் விரும்பாத வரை உங்களில் எவரும் ஈமான் கொண்டவர் ஆகிவிடமாட்டார்." (அல்புஹாரி)

அன்பின் சிறார்களே! இது நாம் அனைவரும் நன்கறிந்த, மனனம் செய்திருக்கின்ற ஒரு நபிமொழி ஆகும். இருப்பினும் இதன் பரந்த கருத்தை காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு சுருக்கமாக விளக்கலாம் என நினைக்கின்றேன்.

நாம் இஸ்லாத்தை எமது மார்க்கமாக ஏற்று இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த இஸ்லாம்தான் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மார்க்கம் என அல்குர்ஆன் சுட்டிக் காட்டுகின்றது.

"நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் பொருந்திக் கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாமாகும்." (ஆல இம்ரான்: 18)

இஸ்லாத்தை ஏற்று இவ்வுலகிலே வாழ்பவர் செய்ய வேண்டிய கடமைகள் பல. அவற்றுள் ஒன்றுதான் நாம் ஏற்றிருக்கின்ற இந்த இஸ்லாத்தை பிற மத சகோதரர்களுக்கும் எத்திவைப்பதாகும்.

ஏனெனில், இஸ்லாம் அல்லாத எந்தக் கொள்கையும் கோட்பாடும் அல்லாஹ்விடத்தில் அங்கீகாரம் பெற்றதாக இருக்க முடியாது.

"இஸ்லாம் அல்லாத மார்க்கத்தை எவராவது தேடிக் கொண்டால் அது அவரிடமிருந்து அங்கீகரிக்கப்படவே மாட்டாது. மேலும், அவர் மறுமையில் நஷ்டமடைந்தோரில் ஒருவராக இருப்பார்." (ஆல இம்ரான்: 85)

நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸில் நபியவர்கள் குறிப்பிட்டுள்ள, தான் விரும்புவதை பிற சகோதரனுக்கும் விரும்புதல் என்பதன் மூலம் நாம் பின்வரும் விளக்கங்களை எடுக்கலாம்.

01. அடுத்தவர் என்னைப் பற்றி புறம், கோள், பொய் பேசக் கூடாது என நான் விரும்புகின்றேன். ஆகவே, நானும் மற்றைய சகோதரனைப் பற்றி இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை விட்டும் தவிர்ந்திருக்க வேண்டும்.

02. உலகத்தில் நான் வாழ்கின்றபோது அனைத்து வளங்களையும் செல்வங்களையும் பெற்றவனாக வாழ்கின்றேன். எனவே, அவற்றிலிருந்து எனது மற்றைய சகோதரனுக்கும் வழங்க வேண்டும்.

03. இவ்வுலகிலே நான் விரும்புகின்ற உயர்ந்த ஒரு நலவு இருக்கும் என்றால் அது நிச்சயமாக நான் ஏற்றிருக்கும் தீன்தான். இதனை எச்சந்தர்ப்பத்திலும் நான் விட்டுக் கொடுக்க தயார் இல்லை. எனவே, நான் மேலாக கருதுகின்ற இந்த தீன் மற்றைய சகோதரர்களுக்கும் சென்றடைய வேண்டும். இதன் மூலம் நான் மாத்திரமல்லாது ஏனைய சகோதரர்களும் சுவனம் நுழைய வேண்டும்.

முதல் இரண்டு விடயங்களையும் நாம் முடிந்தவரை செய்து வருகின்றோம். மூன்றாவது விடயத்தில்தான் நாம் கவனம் இன்றி வாழ்கின்றோம்.

நாம் வாழுகின்ற சூழலில், பாடசாலைகளிலுள்ள எம்மைப் போன்ற அந்நிய மாணவர்களுக்கும் நாம் எமது தீனை எடுத்துரைத்து அவர்களுக்கு அல்லாஹ்விடத்தில் பொருந்திக்கொள்ளப்பட்ட

(41ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியூகம் (Strategy) என்பது திட்டமிடலின் சிகரமாகக் கருதப்படுகின்றது. வியூகத் திட்டமிடல் தான் இன்றைய நவீன உலகின் போக்கு ஆகும். எதிர்கால நிகழ்வுகளை முன்கூட்டியே அனுமானித்து திட்டமிடுவது தொலைநோக்குமிக்க திட்டமிடல் எனப்படும். இந்தத் தூரநோக்குமிக்க திட்டமிடல் மூலம் முடியுமானவரை எதிர்கால நிகழ்வுகளை நுணுக்கமாக அனுமானித்து ஆராய்ந்து திட்டமிடுவர். இந்தத் தொலைநோக்குமிக்க திட்டமிடலைத் தகர்த்தெறிந்து அவற்றையும் தாண்டி திட்டமிடுவதே வியூகத் திட்டமிடல் (Strategic Planning) எனப்படும். இத்தகைய ஒரு நுணுக்கமான திட்டமிடலாகத்தான் நபியவர்களின் திட்டமிடல்கள் அமைந்திருந்தன. இந்த வகையில் உஹத் களத்திற்கு புறப்படுவதற்கு நபியவர்கள் திட்டமிட்டதைக் குறிப்பிடலாம்.

வியூகம் - திட்டமிடலின் சிகரம்

பத்ர் களத்திற்கு நபியவர்கள் முதலில் பயணித்து வந்தது போல உஹத் களத்திற்கு குறைஷிகள் முதலில் வந்து கூடாரமடித்துவிட்டனர். இதனால் உஹத் களத்திற்கு வரும் வழியில் குறைஷிகள் தடையாக இருந்தனர் என்பதை நாம் பார்த்தோம். எனவே, மாற்று வழி மூலம் நபியவர்கள் உஹத் மலைக்கு அருகிலுள்ள 'உத்வதுல் வாதி' எனும் கணவாயில் கூடாரமடித்தார்கள். கூடாரமடித்த அமைவிடத்தைப் பொறுத்தவரை மதீனாவுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் குறைஷிகளின் படை இருந்தது. இவ்வாறு கூடாரமடித்தபோதுதான் நபியவர்களின் யுத்த வியூகம் வெளிப்பட்டது.

நபியவர்கள் ஸஹாபிகளுடன் கூடாரமடித்திருந்த இடத்தைப் பொறுத்தவரை அவ்விடத்திற்குப் பின்புறமாக எதிரிகள் தாக்குதல் நடத்தி முஸ்லிம்களின் படையைத் தோல்வியடையச் செய்யக்கூடிய வாய்ப்புக் காணப்பட்டது. இந்த வாய்ப்பை எதிரிகளுக்கு அளிக்காமலும் அதனை முஸ்லிம்களுக்கு சாதகமானதும் வெற்றியளிக்கக்கூடியதுமாகவும் மாற்றக்கூடிய வியூக முறையொன்றை நபியவர்கள் கையாண்டார்கள்.

அதுதான், அம்பெறிவதில் மிகத் தேர்ச்சி பெற்ற 50 வீரர்களைத் தெரிவு செய்து அவ்வாறு எதிரிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்தக்கூடிய இடத்திலுள்ள குன்று ஒன்றின் மீது நிலைநிறுத்தினார்கள். இதனால் எதிரிகள் அவ் வழியினூடாக முஸ்லிம்களைத் தாக்க முடியாத பாதுகாப்பு அரண் கட்டமைக்கப்பட்டதுடன் அது எதிரிகளுக்கு மிகப் பெரும் சவாலாகவும் அமைந்து விட்டது.

இத்தகைய மிகப் பெரிய சாணக்கியமிக்க வியூக முறையைக் கையாண்ட நபியவர்கள் அதன் முக்கியத்துவத்தை உணர்த்தவும் தவறவில்லை. அக் குழுவுக்கு தலைவராக நியமிக்கப்பட்ட அப்துல்லாஹ் இப்னு சுபைர் இப்னு நுஃமான் அல்அன்ஸாரி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை அழைத்து பின்வருமாறு உபதேசித்தார்கள்.

"எதிரிகளின் குதிரைப் படை எங்களை நெருங்கவிடாமல் அம்பெய்து அவர்களை நீர் தடுக்க வேண்டும். எதிரிகள் எங்களுக்குப் பின்புறத்திலிருந்து வந்துவிடக் கூடாது. போர் நமக்கு சாதகமாக அல்லது பாதகமாக அமைந்தாலும் நீர் உனது இடத்தில் நிலையாக இருக்க வேண்டும். உமது வழியாக எதிரிகள் எங்களை தாக்கிவிடக் கூடாது." (இப்னு ஹிஷாம்)

தளபதிக்கு உபதேசம் செய்த பிறகு, மற்ற வீரர்களுக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) பின்வருமாறு அறிவுரை கூறினார்கள்:

"நீங்கள் எங்களின் முதுகுப் பக்கங்களை (பிற்பகுதியை) பாதுகாத்து கொள்ளுங்கள், நாங்கள் போரில் கொல்லப்படுவதைப் பார்த்தாலும் நீங்கள் எங்களுக்கு உதவ வராதீர்கள்; நாங்கள் வெற்றி பெற்று பொருட்களைச் சேகரிப்பதைப் பார்த்தாலும் அதிலும் நீங்கள் எங்களுடன் இணைந்து விடாதீர்கள்."

(முஸ்னது அஹ்மது, முஃஜமுத் தபரானி)

(14ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் சாதிக்கலாம்

'கேம்ஸ் விளை யாடுறது பெரிய விஷயமல்ல, கேம்ஸை நீங்களே உருவாக்க முயற்சி பண்ணுங்க'

ஷரவனின் கண்களில் ஆழ்ந்த ஞானம், சஞ்சயிடம் குறும்பு பொங்குகிறது. சொப்ட்வெயார் தொழில்நுட்பம் பற்றி எதைக் கேட்டாலும் விரல் நுனியில் பதில் வைத்திருக்கிறார்கள். தந்தை குமரன் சுரேந்திரன், ஓர் அண்டி வைரஸ் சொப்ட்வெயார் நிறுவனத்தில் மேலாளர். அம்மா ஜோதி, இல்லத்தரசி.

"எல்லாத்துலயும் முன்மாதிரியா இருக்கணும்னு அப்பா பெயின்ட் எம்.எஸ்.ஒபிஸ், பவர் பொயின்ட் கற்றுக் கொடுத்தார். இரண்டு பேருக்குமே படம் வரைவதில் ஆர்வம் உண்டு. படம் வரைஞ்சு பவர் பொயின்டில் செட்பண்ணி விளையாடுவோம். அப்பா எங்களை என்கரேஜ் பண்ணிக் கற்றுக் கொடுத்ததோட, எங்களுக்கு ஒரு கம்யூட்டரும் வாங்கிக் கொடுத்தார்" முதிர்ச்சியான மொழியில் பேசுகிறார் ஷரவன்.

பிள்ளைகளின் ஆர்வத்தைக் கண்ட குமரன், சின்னச் சின்ன அப்ளிகேஷன்களோடு லோகோ, பேசிக் போன்ற கணினி மொழிகளையும் கற்றுக் கொடுத்திருக்கிறார். தந்தை போட்ட கோட்டில் பிள்ளைகள் ரோடு போட்டு விட்டார்கள்.

"அப்பா சம்சுங் கேலக்ஸி மொபைல் வெச்சிருந்தார். அவர் வந்தவுடனே மொபைலை எடுத்து கேம்ஸ் விளையாடுவோம். அப்ளிகேஷன்களைத் தோண்டுவோம். அதில்

கார்ட்டூன் பார்க்கும் வயது, ஷரவனுக்கும் சஞ்சய்க்கும். அதற்குள் கார்ட்டூன் பாத்திரங்களை உருவாக்கி உலாவவிடும் தயாரிப்பாளர்களாகி விட்டனர். சென்னை, ஈஞ்சம்பாக்கம் வேல்ஸ் பிள்ளபாங் பள்ளியில் 8ஆம் வகுப்பு படிக்கிறார் ஷரவன். சஞ்சய் 6ஆம் வகுப்பு. சகோதரர்களான இந்த இருவரும் இணைந்து 'கோ டைமன்ஷன்' (Go Dimension) என்ற நிறுவனத்தை நடத்துகிறார்கள். ஐபோன், எண்ட்ரொய்ட்டு மொபைல்களுக்கான புரோகிரேம்கள் மற்றும் கேம்ஸை உருவாக்கி ஒன்லைனில் வழங்குகிறது இந்த நிறுவனம். தற்போது இந்தியாவின் இளம் சி.இ.ஓ.க்கள் ஷரவனும் சஞ்சயும்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்க இரண்டு பேருக்குள்ளே போட்டியே வரும். இதைக் கவனிச்ச அப்பா, 'கேம்ஸ் விளையாடுறது பெரிய விஷயமல்ல, கேம்ஸை நீங்களே உருவாக்க முயற்சி பண்ணுங்க' என்று சொன்னார். நிறைய புத்தகங்களும் வாங்கிக் கொடுத்தார். ரூபி கன்வெர் ஷன், டைம் கன்வெர்கூன்று நூற்றுக்கும் மேற்பட்ட அப்ளிகேஷன்கள். ஆனால், எல்லாமே சாதரணமா இருந்துச்சி. பெரிசா ஒரு கேம் எழுத ணும்னு திட்ட மிட்டோம்.

அதுக்கு தகுந்த மாதிரி சம்மர் லீவ் வந்துச்சி. என்ன கேம் எழுதலாம்னு யோசிச்சப்போ, 'சின்ன வயசுல நாம விளையாடின திருடன் பொலிஸ் கேமையே எழுதலாம் என்று அண்ணன் சொன் னான். அதுக்கு 'கேட்ச் மீ காப்' என்று பெயர் வைத்தோம். இந்த கேமை இன்டர்நெட்ல அப் லோட் பண்ணினோம். 3 மாசத்துல 43 நாடுகளில் இருந்து 20ஆயிரம் டவுன்லோடு பண்ணினாங்க" என்று விழி விரியப் பேசுகிறார் சஞ்சய்.





"மொபைல்னா எங்க வயசுப் பிள்ளைகளுக்கு கேம்ஸ்தான் நினைவுக்கு வரும். அதையே 'எடியு கேஷன் டிவைஸா' மாத்தணும்னு யோசிச்சோம். ஒரு 'அல்பபேடிக் போர்டு' உருவாக்குனோம். 'A' என்ற எழுத்துல கை வெச்சா ஒரு அப்பிள் வரும். ஏ ஃபார் ஆப்பிள்னு குரலும் வரும் இதுக்கும் நல்ல ரெஸ்பொன்ஸ்."

"ஒரு முறை குடும்பத்தோட ஃபிளைட்ல போய்க்கொண்டிருந்தோம். விமானத்தில் சின்னக் கோளாறு. ஒண்ணும் ஆகிடக்கூடான்று கடவுள் கிட்ட வேண்டிக்கோங்க என்று அம்மா சொன் னாங்க. ஃபிளைட்ல ஏது கடவுள் படம்? அந்த அனுபவத்துல "பிரேயர் பிளானெட்" உருவாக்கு வோம். அந்த அப்ளிகேஷனை ஓபன் பண்ணினா, எல்லா மதங்களோட கடவுளும் பின்னணியில அந்தந்த மதத்துக்குரிய இறை பக்திப் பாடலும் ஒலிக்கும். இந்த புராடெக்டை எல்லாம் மார்க் கெட் பண்றது எப்படின்னு யோசிச்சப்பதான்.

நீங்களே ஒரு கம்பனியை ஆரம்பிங்களேன் என்று அப்பா சொன்னார். அவரோடு வழிகாட்டு தல்படி 'கோ டைமன்ஷன் நிறுவனத்தைத் தொடங் கினோம்" என்கிறார் ஷரவன்.

"எல்லாத்துலயும் முன்மாதிரியா இருக்கணும்னு அப்பா பெயின்ட் எம்.எஸ்.ஒபிஸ், பவர் பொயின்ட் கற்றுக் கொடுத்தார். இரண்டு பேருக்குமே படம் வரைவதில் ஆர்வம் உண்டு. படம் வரைஞ்சு பவர் பொயின்டில் செட்பண்ணி விளையாடுவோம். அப்பா எங்களை என்கரேஜ் பண்ணிக் கற்றுக் கொடுத்தோட, எங்களுக்கு ஒரு கம்யூட்டரும் வாங்கிக் கொடுத்தார்."

முதியோருக்கான எமர்ஜென்ஸி பூத் என்ற அப்ளிகேஷன் முக்கியமானது. அதைத் திறந்தால் போலிஸ், ஆம்புலன்ஸ், தீயணைப்புத்துறை எண்கள் ஒளிரும். அதில் கை வைத்தால் போதும் உடனடியாக கோல்போகும். இது தவிர, 3 உறவினர்களின் எண்களையும் பதிவு செய்து வைக்கும் வசதி உண்டு. அவர்களுக்குத் தானாகவே எமர்ஜன்ஸி என்று எஸ்.எம்.எஸ். போய்விடும். வயதானவர்களுக்கு உற்ற துணைவனாக இருக்கும் இந்த அப்ளிகேஷன்களை உலகம் முழுவதும் பயன்படுத்தும் வகையில், அந்தந்த நாடுகளுக்குரிய அவசர உதவி எண்களோடு அப்டேட் செய்திருக் கிறார்கள். இந்த சகோதரரர்களின் கனவு, கிராமத்து விளையாட்டுக்கள் அனைத்தையும் மொபைலுக் கும் கம்யூட்டருக்கும் கொண்டு வர வேண்டும் என்பதே. மொபைல் அப்ளிகேஷன் தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களை தன் பிள்ளைகளிடம்தான் கேட்டுத் தெரிந்து கொள்கிறாராம் குமரன் சுரேந் திரன். இதைவிட ஒரு தந்தைக்கு வேறென்ன பெருமை வேண்டும்...?

○ நன்றி: குங்குமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டையின் நிறங்கள்



நத்தை	- மஞ்சள்
பல்லி	- வெள்ளை
தவளை	- பச்சை
தூக்கணாங்குருவி	- கபிலம்
மீன்	- மஞ்சள்
கோழி	- வெள்ளை
வாத்து	- வெள்ளை
வண்ணத்துப் பூச்சி	- மஞ்சள்
காகம்	- இளம் பச்சை

எஸ்.எல். முஹம்மத் ஹஸன்,
தரம் 5,
தி/அல்தாரிக் ம.வி,
கந்தளாய்.

கண்டுபிடிப்பும் கண்டுபிடிப்பாளரும்



தீப்பெட்டி	- ஜோன் வோக்கர்
ஒலிபெருக்கி	- ஹொரஸ் ஸோர்ட்
சீமெந்து	- ஜோசப் எஸ்ப்டின்
பேனை	- ஜே.ஜே. லோட்
யுத்த தாங்கி	- சேர் ஏ. ஸ்லிங்கட்
அடிமட்டம்	- வில்லியம் ஒக்டர்ட்
பரசூட்	- ஏ.ஜே. கர்னரின்
நைலோன்	- எல்.எச். கெரோதஸ்
மூக்குக் கண்ணாடி	- பெஞ்சமின் பிராங்லின்
எக்ஸ் கதிர்	- வில்லியம் கே. ரொய்ன்டன்

அப்பிள் பழத்தின் அருமை

- அப்பிள் பழம் விலை உயர்ந்திருந்தாலும் அதனுள் அடங்கியுள்ள சத்துக்களும் அதிகம்.
- அப்பிள் பழத்தில் புரதம், கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச் சத்து, உயிர்ச்சத்து என்று ஏராளமாக சத்துக்கள் அடங்கியுள்ளன.
- இதன் தோலைச் சீவாமல் அப்படியே சாப்பிட வேண்டும். இதனால் இதன் முழு சத்துக்களையும் பெறலாம்.
- வரட்டு இருமலால் வேதனைப்பட்டால் அப்பிள் பழத்தை காலையில் ஒரு பழமும் மாலையில் ஒரு பழமும் கடித்துத் தின்றால் சரியாகிவிடும்.
- அப்பிள் பழத்தை ஆவியில் வேகவைத்து சாப்பிட்டால் வயிற்றுக் கோளாறுகள் அகன்றுவிடும்.
- தினசரி ஒரு அப்பிள் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் அழகோடும் ஆரோக்கியத்தோடும் இருக்கும்.
- அப்பிள் பழத்தையும் பாதம் பருப்பையும் நன்றாக அரைத்து சுத்தமான பசுவின் பாலைக் காய்ச்சி அதில் கலந்து சாப்பிட்டால் ஞாபக மறதியை போக்கும், மூளை வளர்ச்சி பெறும்.

அஸ்மா நிஸாம்,
தரம்: 10,
வெலம்பொட மு.ம.வி,
வெலம்பொட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாட்டு முதுமொழிகள்

- நெருப்பை நீ மறைக்க முடியும். புகையை நீ என்ன செய்யப் போகிறாய்? - அமெரிக்கா
- சோம்பேறியின் மூளை ஷைத்தானின் தொழிற்சாலை- ஸ்கொட்லாந்து
- குறைந்த ஆசை இன்ப வாழ்க்கை- துருக்கி
- உன் அயலவனை நேசி. ஆனால் வேலியை எடுத்து விடாதே - டென்மார்க்
- சுத்தமான காற்று வைத்தியனையும் ஏழையாக்கும் - டென்மார்க்
- காதைப் பிடித்து இழுத்தால் தலை பின் தொடரும் - இந்தியா
- கற்பனைப் பேய்களைத் தவிர வேறு பேய்கள் இல்லை - இந்தியா
- அறிஞர்கள் கூட்டம் ஓர் உயிருள்ள வாசிகசாலை - அரேபியா

ஏ. அப்ரா,
பாத்திமா சஹ்ரா ம.அ.க,
4ஆம் வருடம்,
ஓட்டமாவடி.

அறிந்து கொள்ளுங்கள்

2010ஆம் ஆண்டு 20ஆவது பொதுநலவாய மாநாடு நடைபெற்ற இடம்-புது டில்லி, இந்தியா
2007 டிசம்பரில் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு இடம் பெற்ற இடம்- இந்தோனேஷியாவின் பாலி தீவு.
நேபாளத்தின் முதலாவது ஜனாதிபதி-ரம்பரன் யோதேன்
கென்யாவின் பிரதமர்-ரய்லா ஓடின்கோ
இலங்கையில் அச்சுக் கலை ஆரம்பமானது- ஒல்லாந்தர் ஆட்சியில்
இரண்டாம் பராக்கிரமபாகுவினால் எழுதப்பட்ட பெருங்காவியம்- கவிசிலுமின
மூன்று தலைநகரங்களைக் கொண்ட நாடு-தென் ஆபிரிக்கா
மிகவும் நீளமான தேசிய கீதம்- கிரேக்க நாட்டு தேசிய கீதம்
இயற்கை வளங்கள் ஏராளமிருந்தும் வறுமை அதிகம் கொண்ட நாடு- கொங்கோ

எஸ்.எப். இஹ்ஸானா,
தரம்: 11,
பாத்திமா ஸஹ்ரா மு.ம.அ.க.

நபிமார்கள் பற்றிய தகவல்கள்

01. யூஸுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் சட்டை மூலம் கண் பார்வை பெற்ற நபி யார்? யஃகூப் (அலைஹிஸ்ஸலாம்)
02. அல்லாஹ் பூகம்பத்தைக் கொண்டு எந்த நபியின் சமூகத்தை அழித்தான்? ஷுஐப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் சமூகத்தை அழித்தான்.
03. பல்வேறு நோய்களாலும் வறுமையாலும் பாதிக்கப்பட்ட நபி யார்? அய்யூப் (அலைஹிஸ்ஸலாம்)
04. வயது முதிர்ந்த பிறகு தந்தையான நபி யார்? ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்)
05. அல்லாஹ்வினால் வெள்ளப் பிரளயத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட நபி யார்? நூஹ் (அலைஹிஸ்ஸலாம்)
06. இனிமையான குரலை உடைய நபி யார்? தாவூத் (அலைஹிஸ்ஸலாம்)
07. மனித குலத்தின் தந்தை என்றழைக்கப்படும் நபி யார்? ஆதம் (அலைஹிஸ்ஸலாம்)
08. பிராணிகளின் மொழியினை விளங்கிக் கொள்ளும் ஆற்றலைப் பெற்ற நபி யார்? சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்)

எஸ்.ஏ. ஸாசியா,
5ஆம் வருடம்,
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க,
ஓட்டமாவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவையான தகவல்கள் சில

எம்.என்.எப். அஸ்மா,
வெலம்பொட மு.ம.வி,
வெலம்பொட.

- ✶ கனவு எத்தனை நிமிடங்கள் வரை நீடிக்கும்? 6முதல் 10 நிமிடங்கள் வரை
- ✶ உகாரி என்பது என்ன? ஒரு வகை குரங்கு
- ✶ உலகில் பெரிய ஆமை எது? தோல் மூடு ஆமை
- ✶ எந்தப் பறவை தன் குஞ்சுகளை காலில் அடைகாக்கும்? பென்குவின்
- ✶ ஒட்டகச் சிவிங்கியின் கழுத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன? 07 எலும்புகள்
- ✶ தாஜ்மஹால் எந்த வகை மாபிளால் கட்டப்பட்டுள்ளது? மக்ரானா
- ✶ அணுகுண்டு வெடித்தாலும் சாகாத உயிரினம் எது? கரப்பான் பூச்சி
- ✶ பூமியில் நம் வயது 10ஆக இருந்தால் செவ்வாயில் என்னவாக இருக்கும்? 5 ஆக இருக்கும்
- ✶ எளிதில் தீப்பிடிக்காத மரம் எது? ரெட்வுட் மரம்

- ⇨ பைரஹா தோட்டத்தை இஸ்லாத்திற்காக தியாகம் செய்த ஸஹாபி யார்? அபூ தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு)
- ⇨ அரபா மைதானத்திலுள்ள பள்ளிவாசலின் பெயர் என்ன? மஸ்ஜிதுல் நமீரா
- ⇨ எகிப்தை இஸ்லாமிய ஆட்சியின் கீழ் கொண்டு வந்த வீரத் தளபதி யார்? அம்ரு இப்னு ஆஸ் (ரழியல்லாஹு அன்ஹு)
- ⇨ தொலமியின் உலகப் படத்தை விட சிறப்பாக முதலில் உலகப் படத்தை வரைந்த முஸ்லிம் அறிஞர் யார்? இத்ரீஸ்
- ⇨ கடல் யுத்தத்தால் முஸ்லிம்கள் முதலில் கைப்பற்றிய தீவு எது? சைப்ரஸ்
- ⇨ வேற்று மொழித் தொடர்புகளுக்கு 17 நாட்களில் அம் மொழியைப் படித்து முடித்த ஸஹாபி யார்? ஸைத் இப்னு தாபித் (ரழியல்லாஹு அன்ஹு)
- ⇨ மஸ்ஜிதுன் நபவியின் முதலாவது அதான் கூறியவர் யார்? பிலால் (ரழியல்லாஹு அன்ஹு)
- ⇨ பாரசீகத்தில் முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர் யார்? ஸல்மானுல் பாரிஸ் (ரழியல்லாஹு அன்ஹு)



அறிவுத் துணுக்குகள்

என்.எப். முஸ்பிரா, தரம்: 11,
நிக/ நம்முவாவ மு.ம.வி,
நம்முவாவ.

ஹுதைபிய்யா உடன்படிக்கை



- ▶ இந்த ஆண்டு முஸ்லிம்கள் திரும்பிவிட வேண்டும்.
- ▶ அடுத்த ஆண்டு வந்து மூன்று நாட்களில் உம்ராவுக்கான கிரியைகளை முடித்துக் கொண்டு திரும்பிவிட வேண்டும்.
- ▶ ஆயுதங்களுடன் வரக்கூடாது (தற்காப்புக்கான வாள் மட்டும் உறையில் வைத்துக்கொள்ளலாம்)
- ▶ முஸ்லிம் அல்லாதவர் மக்காவிலிருந்து மதீனாவிற்கு வந்தால், அவரை மக்காவுக்கு அனுப்பிவிட வேண்டும். யாராவது மதீனாவிலிருந்து மக்காவிற்கு வந்தால் அவர் திருப்பி அனுப்பப்பட மாட்டார்.
- ▶ பத்து ஆண்டுகள் இரு தரப்பினரும் போரிட மாட்டார்கள்; அமைதி நிலவும்.
- ▶ அரபு நாட்டின் குலங்கள், கோத்திரங்கள் இவ்விரு தரப்பாரில் யாருடன் விரும்பினாலும் உடன்படிக்கை செய்து கொள்ளலாம்.

எப். ரிஸ்தா ரிஷான், தரம்: 07,
நளீம் ஹாஜியார் பெ.க,
பேருவலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் மகிமை

எம்.எப்.எப். சித்தீக்கா,
தரம்: 5,
அல்அமீன் ம.வி.

- ஒரு வருட காலத்தை க.பொ.த. சாதாரண தர மாணவர்களிடம் கேட்டு அறிந்துகொள்.
- 10 மாதத்தை கர்ப்பிணிப் பெண்ணிடம் கேட்டு அறிந்துகொள்.
- ஒரு மாதத்தை மாதச் சம்பளம் எடுப்பவனிடம் கேட்டு அறிந்துகொள்.
- ஒரு நாளை நாள் சம்பளம் எடுப்பவனிடம் கேட்டு அறிந்துகொள்.
- ஒரு நிமிடத்தை ஓட்டப் போட்டியில் தோற்றவனிடம் கேட்டு அறிந்துகொள்.
- ஒரு செக்கனை விபத்தில் தப்பியவனிடம் கேட்டு அறிந்துகொள்.
- ஒரு மில்லி செக்கனை உயிருக்கு போராடியவரிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

நேரம் ஒதுக்குங்கள்

- வேலை செய்ய நேரம் ஒதுக்குங்கள்; அது வெற்றிக்கான விலை.
- சிந்திக்க நேரம் ஒதுக்குங்கள்; அது ஆக்கபூர்வமான சக்தி.
- விளையாட நேரம் ஒதுக்குங்கள்; இது இளமைக்கான இரகசியம்.
- படிக்க நேரம் ஒதுக்குங்கள்; அது அறிவுக்கான ஊற்று.
- நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள்; அது மகிழ்ச்சியான பாதை.
- நேசிக்க நேரம் ஒதுக்குங்கள்; அது உற்சாகமான வாழ்க்கை.
- சிரிக்க நேரம் ஒதுக்குங்கள்; அது ஆத்மாவின் ராகம்.

எப். நாதிரா நஸார்,
தரம்: 11,
நளீம் ஹாஜியார் பெ.க.
பேருவலை.

PUBLIC LIBRARY
JAFFNA

- சூரியனின் வெப்ப அளவு 9000f ஆகும்.
- சந்திரன் இல்லாத கிரகங்கள் புதன், வெள்ளி, புளூட்டோ என்பனவாகும்.
- அணுகுண்டை விட அபாயம் விளைவிக்கும் குண்டு சல வாயுக் குண்டு (Hydrogen Bomb) ஆகும்.
- ஒரு நிமிடத்திற்குள் மூளைக்குள் ஓடும் குருதியின் அளவு 0.85 லீற்றராகும்.
- தண்ணீர் நீராவியாகும்போது 1800 மடங்காக விரிகிறது.
- நாகப் பூச்சைக் கரைக்கக்கூடிய ஒரு கரைப்பான் அசற்றோன் ஆகும்.
- றொபர்ட் வெய்னபெரி என்பவரால் 1682ம் ஆண்டு புற்றுநோய் கண்டுபிடிக்கப்பட்டது.
- தடிமன் நோயை ஏற்படுத்தும் வைரஸ் ரோனோ வைரஸாகும்.
- சீனப் பெருஞ் சுவரைக் கட்டுவித்தவர் சிஹியாங்கி.

உண்மைத் தகவல்கள் சில...

அப்துல் மஜிட் இல்மியா,
தரம்: 11,
அஸ்ரப் மத்திய கல்லூரி,
இறக்காமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு எஸ் (6S)

செயல்முறை வேலைத்திட்டம்



செய்ரி, செய்தோன், செப்ஸோ, செய்கத்சு, சித்சுகே என்ற ஜப்பானின் ஐந்து 'எஸ்' மற்றும் பயனுறு செயல்முறைக்கு அப்பால் சென்று பாதுகாப்பு தொடர்பான அறிவுறுத்தல் என்பதையும் சேர்த்து 6S என்ற பெயரில் பாடசாலை பயனுறு வேலைத் திட்டம் 2013 ஏப்ரல் மாதம் கல்வி அமைச்சினால் அமுலாக்கப்பட்டது.

உலகின் இரும்புப் பெண்மணி

உலகில் இரும்புப் பெண்மணி என அழைக்கப்படும் பிரிட்டனின் முதலாவது பெண் பிரதமர் மார்கிரட் தட்சர் 2013 ஏப்ரலில் காலமானார். இவர், தொடர்ச்சியாக நடைபெற்ற மூன்று பொதுத் தேர்தல்களில் வெற்றி அடைந்தார். இவருடைய அரசியல் கோட்பாடு தட்சர் வாதம் என சிறப்புப் பெறுகின்றன.

இலங்கையில் உள்ள பாடசாலைகளும் வகைகளும்

பாடசாலை வகை	எண்ணிக்கை	வீதம்
1AB பாடசாலை	716	7%
1C பாடசாலை	2027	21%
வகை 2 பாடசாலை	4045	42%
வகை 3 பாடசாலை	2943	30%
மொத்தம்	9731	100%

உலக புத்தக தினம்



உலக புத்தக தினம் வருடாந்தம் ஏப்ரல் 23இல் அனுஷ்டிக்கப்படுகின்றது.



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (jaf), M.com (Kelaniya) (R) Spl.Trd.com,
NDBF, Sri Lanka Technical College - Colombo



உலக சுகாதார தினம்

உலக சுகாதார தினம் வருடாந்தம் ஏப்ரல் 7இல் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2013ம் ஆண்டிற்கான உலக சுகாதார தின தொனிப்பொருள் உயர் இரத்த அழுத்தம் என்பதாகும்.

உலகின் பாராளுமன்றங்களில் பெண்கள் சதவீதம் கூடிய நாடுகள்

ருவான்டா பாராளுமன்றம்

நாடு	பாராளுமன்றத்தில் பெண்கள் எண்ணிக்கை
ருவான்டா	49
சுவீடன்	45
டென்மார்க்	38
பின்லாந்து	38
நெதர்லாந்து	37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் اللغة العربية

அரபு மொழி

தொடர்: 40

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

எத்தனை كَمْ

இன்றைய பாடத்தில் كَمْ என்ற சொல்லைப் பயன்டுத்தி வினா வாக்கியங்களை அமைக்கும் முறை பற்றி கவனிப்போம்.

كَمْ என்ற வார்த்தை கேள்வியமைப்பை உருவாக்கப் பயன்படுத்தப்படும் ஒரு பெயர்ச்சொல் ஆகும். இச்சொல் பெரும்பாலும் வசனத்தின் ஆரம்பத்தில் வரக்கூடியதாகும். உதாரணங்களின் மூலம் விளங்கிக் கொள்வோம்.

1. **பாடசாலையில் எத்தனை மாணவர்கள் இருக்கின்றனர்?**

كَمْ طَالِبًا فِى الْمَدْرَسَةِ؟

2. **உனக்கு எத்தனை சகோதரர்கள் இருக்கிறார்கள்?**

كَمْ أَخًا لَكَ؟

3. **உனக்கு எத்தனை நண்பர்கள் இருக்கின்றனர்?**

كَمْ صَدِيْقًا لَكَ؟

كَمْ என்ற சொல்லை அடுத்து வருகின்ற பெயர்ச்சொல் ஒருமையாகவும் நஸ்புடைய நிலையிலும் ال இன்றியும் வந்திருப்பதனை மேலுள்ள வசனத்தின் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.

✗ كَمْ طُلاَّبٌ فِى الْمَدْرَسَةِ؟

✗ كَمْ طُلاَّبًا فِى الْمَدْرَسَةِ؟

✓ كَمْ طَالِبًا فِى الْمَدْرَسَةِ؟

4. **நீ மாதத்திற்கு எத்தனை பேனைகளை வாங்குகிறாய்?**

كَمْ قَلَمًا تَشْتَرِيْ فِى الشَّهْرِ؟

5. **பாடசாலை மாணவர்கள் ஒரு நாளைக்கு எத்தனை பாட வேளைகளை கற்கின்றனர்?**

كَمْ حِصَّةً يَدْرُسُ طُلاَّبُ الْمَدْرَسَةِ فِى الْيَوْمِ؟

6. **நீ வாசித்த புத்தகங்கள் எத்தனை?**

كَمْ كِتَابًا قَرَأْتَ؟

7. **ஒரு மாதத்திற்கு எத்தனை நாட்கள் நோன்பு நோற்கிறாய்?**

كَمْ يَوْمًا تَصُوْمُ فِى الشَّهْرِ؟

8. **வாராந்தம் எத்தனை நண்பர்களைச் சந்திக்கின்றாய்?**

كَمْ صَدِيْقًا تَزُوْرُ فِى الْأُسْبُوْعِ؟

9. **ஒரு நாளைக்கு எத்தனை தடவை தொழுகிறாய்?**

كَمْ مَرَّةً تُصَلِّيْ فِى الْيَوْمِ؟

10. **ஒரு நாளைக்கு எத்தனை வேளை உணவு உண்கிறாய்?**

كَمْ وَجَبَةً تَأْكُلُ فِى الْيَوْمِ؟

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஒரு நாளைக்கு மூன்று வேளைகள் உண்கிறேன்.

آكُلُ فِى الْيَوْمِ ثَلَاثَ وَجَبَاتٍ.

12. ஒரு நாளைக்கு எத்தனை மணித்தியாலங்கள் தூங்குகிறாய்?

كَمْ سَاعَةً تَنَامُ فِى الْيَوْمِ؟

13. ஒரு நாளைக்கு ஆறு மணித்தியாலங்கள் தூங்குகிறேன்.

أَنَامُ فِى الْيَوْمِ سِتَّ سَاعَاتٍ.

14. பாராளுமன்றத்தில் எத்தனை அமைச்சர்கள் உள்ளனர்?

كَمْ وَزِيْرًا فِى الْبَرْلَمَانِ؟

15. தோட்டத்தில் எத்தனை மரங்கள் உள்ளன?

كَمْ شَجَرَةً فِى الْحَدِيْقَةِ؟

كَمْ என்ற சொல்லுக்கு முன்னால் இடைச் சொற்களை பயன்படுத்த வேண்டிய வசனங்களாயின் அவற்றை பயன்படுத்தும் முறைக்கான உதாரணங்களையும் நோக்குவோம்.

16. இந்தப் புத்தகத்தை எத்தனை ரூபாய்க்கு வாங்கினாய்?

بِكَمْ رُوْبِيَّةٍ اشْتَرَيْتَ هَذَا الْكِتَابَ؟

17. உனது தந்தை இந்த வீட்டை எத்தனை தீனார் கொடுத்து வாங்கினார்?

بِكَمْ دِيْنَارٍ اشْتَرَى وَالِدُكَ هَذَا الْبَيْتَ؟

18. உனது குடும்பம் எத்தனை நபர்களை கொண்டமைந்துள்ளது?

مِنْ كَمْ شَخْصٍ تَتَكَوَّنُ عَائِلَتُكَ؟

19. எனது குடும்பம் ஐந்து நபர்களைக் கொண்டமைந்துள்ளது.

تَتَكَوَّنُ عَائِلَتِيْ مِنْ خَمْسَةِ أَشْخَصٍ

(05ஆம் பக்கத் தொடர்...)

இதே அறிவுரை ஸஹீஹுல் புகாரியில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது: எங்களைப் பறவைகள் கொத்தித் தின்பதை நீங்கள் பார்த்தாலும் நான் உங்களுக்கு கூறியனுப்பும் வரை உங்களது இடத்தை விட்டு நீங்கள் அகன்றிட வேண்டாம். நாங்கள் எதிரிகளைத் தோற்கடித்து அவர்களின் சடலங்களை மிதித்து செல்வதைப் பார்த்தாலும் நான் கூறியனுப்பும் வரை நீங்கள் அகன்றிட வேண்டாம்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மலையின் மீது நிறுத்திய வீரர்கள் இஸ்லாமியப் படைக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகித்தனர். காலித் இப்னு வலீதின் தலைமையின் கீழ், அபூ ஆமின் உதவியுடன் எதிரிகள் மூன்று முறை இஸ்லாமியப் படையின் பின்புறமாக அமைந்துள்ள அப்பகுதியினூடாக தாக்குதல் நடத்தி முஸ்லிம்களை முறியடிக்க முயன்றனர். முஸ்லிம்களின் பின்புறமாகத் தாக்குதல் தொடுத்து அணியில் சேதங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி அதைத் தொடர்ந்து பெரும் தோல்வியை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்திவிடலாம் என்று மூன்று முறை இம்மலைப் பகுதியின்மீது எதிரிகள் தாக்குதல் நடத்தினர். ஆனால், மலை மீதிருந்து அம்பெறியும் வீரர்கள் இவர்களின் மீது அம்பு மழை பொழிந்து இவர்களின் மூன்று தாக்குதல்களையும் முறியடித்தனர்.

(பத்ஹுல் பாரி)

காலித், மிகப்பெரிய போர் நிபுணர். காலிதின் படை அவ்விடத்தின் மூலம் தாக்குவதற்கு 03 முறை முயன்றார்கள் என்பதிலிருந்து அவ்விடத்தின் முக்கியத்துவத்தையும் அதனை எதிர் கொள்வதற்கான நபியவர்களின் வியூகத்தையும் அறிந்து கொள்ளலாம். எனவே, எமது வாழ்க்கையிலும் இத்தகைய வியூக முறைகளைக் கடைபிடித்து ஜெயம் பெற முயல்வோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"How much do you know?"

Assalamu alaikum dear friends,

The Exam results of your brothers and sisters are out now! What is your feed back? Have you noticed that the people who made a genuine effort, have succeeded? This is life. But some friends who worked har have got average results, too. That is too life !

All the decisions come from Allah's side. Whatever the results you get, the knowledge you gained from the hard work will never fade off.

Coming back to ourselves, next time we would be sitting for exams! There are many more to come. Let's be prepared with knowledge and dua.

Look at this quote

> **"People with goals succeed because they know where they're going."**

Earl Nightingale

1. Before you face any exam , decide your goal
2. Always have a second goal, too, in case you couldn't achieve the first one
3. Concentrate on your goal as you work.
4. Make dua from Allah, and have a good niyyah
5. Help others, studying only is not enough

Success will be YOURS !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This time we give more space for our readers. Here are some creations of our readers all over the island !

Sports



Sports are my true friends
When I hated my true friends
With them I regularly practiced
Made my muscles with power against Vulnerability
Stronger and Stronger I became
I knew my success will come through this.
I achieved the great Golden feats
Which I used them to beat,
The Sport has many brothers,
I was a Friend of only two-
Karate and Football
They gave me a thrill
Even when I used to drill anything
Those are thrilling, fascinating, fabulous and marvelous
Doings in the world.
They give us our minds some fresh news
They coolen' our hearts by
Instructing us to be peaceful through.
Learn to love them all
To live in coexistence amongst our surrounding
Not to just hammer anyone proudly,
You need to learn something which you can't learn in publicity
Do Sports to be a legend in itself if you can't in your studies
Do anything in sports even if you're to die,
Those will not be forgotten by the whole world
Learn to love them ,they'll teach you in something.



Abdur Rahman AYYASH
8EC
Zahira College Colombo

The Happiest !



Mother gives me love and care.
Father shows me how to fare.
Friends give me joy and fun.
Uncles buy me toys that run.

Granny tells me tales at night.
Brother spares his bike and kite.
Sister plays some tricks that please.
Teachers help me learn with ease.

I am the happiest you can see.
To have them all here with me.

By MCM Safiyu
Gr 10
KM/Al-Misbah Maha Vidyalaya
Kalmunai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The use of a coconut tree

Coconut grows well in Sri Lanka. It is a very useful tree. The coconut tree gives us coconuts. We can use the coconut milk for cooking. It is also used for making coconut toffees and chocolate rolls. They are very tasty.

We can use the coconut husk for many purposes. We can burn it as fuel. We can take the coconut fiber and make rope. Coir mats and coir rags are made with this. The palm leaves are used for roofing the houses and for fencing.

The coconut shell is also very useful. The milk of young coconut is a refreshing drink. Every part of the coconut tree is useful.

A.R.M.Razmi and
M.Y.M.Rimzi
Grade 09-B
B/Welimada M.M.V

My Role Modal

My role modal in my life is Dharik sir. He is from Chillaw but is married in Alankuda. He is a teacher of Thigali Muslim M.V. He teaches Islam for us. Not only he is a teacher but also my neighbor. He has two children. One is a girl and another one is a boy. He gave his children meaningful names. He teaches us not only Islam but also good manners. He is a good father for his children, good son for his parents, good brother for his sister, good husband for his wife, good teacher for his students .....e.t.c

I learnt from him reverence, innocence, silence and respect and all of the good things. I will never forget him in my life. I hope I've chosen a best role modal.

Ashraf Fathima Ashla
Kal/Thigali M.M.V
10B

A famous place in sri lanka

Trincomallee is a coastal town situated in the eastern province. It has one of the natural harbors of the world. The harbor consists of an inner and an outer harbor. It has also earned a name as the safest and the most attractive harbor in South Asia.

An important land mark in Trincomallee is an ancient fortress named fort Fedrik. It was first built by the Portuguese and then later captured by the British. A road which runs through this fort leads to the famous Hindu shrine , swami rock. In the South east of Trinco , across the Koddiyar bay lies the famous Buddhist Degeba at seruwila. Seruwila has to be reached by means of a ferry. Fery is a kind of boat service which takes you across the bay.

Nadhir Nazeer
Gr-07
Al-Humaisara National School

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

வரலாறு

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

தரம் 10

பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.

1. வரலாற்றுக்கு முற்பட்ட மனிதர்கள் வாழ்ந்த இடங்களின் தொகுதி.
   - i. இராவணன் எல்ல, வல்லிபுரம், பட்ட தொம்ப குகை
   - ii. புலத்சிங்கள, பட்ட தொம்ப குகை, பாகியன் கல
   - iii. பட்டதொம்ப குகை, பொலன்னறுவை, பாகியன் கல குகை
   - iv. இராவணன் எல்ல, பாகியன் கல, பொலன்னறுவை

2. பலாங்கொடை மனிதனின் உணவில் இடம் பெறாத ஒரு விடயம்.
   - i. முள்ளம் பன்றி
   - ii. அணில்
   - iii. குரங்கு
   - iv. முயல்

3. விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பு கடந்து வந்த இரு துறைமுகங்கள்.
   - i. பாரக்கச்சு, சுப்பாரக
   - ii. சுப்பாரக, தாம்றலிப்தி
   - iii. பாரக்கச்சு, கள்ளிக்கோட்டை
   - iv. தாம்றலிப்தி, கோவா

4. தரப்பட்ட இந்தியப் படத்தில் A, B, C, D என்ற எழுத்துக்களில் குறிக்கப்பட்டுள்ள இடங்கள் முறையே



   - i. A - பாண்டி நாடு B - லாட நாடு C - சோழ நாடு D - சேர நாடு
   - ii. A - லாட நாடு B - சோழ நாடு C - சேர நாடு D - பாண்டி நாடு
   - iii. A - லாட நாடு B - பாண்டி நாடு C - சோழ நாடு D - சேர நாடு
   - iv. A - சோழ நாடு B - சேர நாடு C - லாட நாடு D - பாண்டி நாடு

5. மல்வத்து ஓயா (கதம்ப நதி) கரையில் அமைக்கப்பட்ட ஒரு குடியிருப்பு.
   - i. விஜிதகம
   - ii. உறுவெல
   - iii. தீகவாபி
   - iv. உபதிஸ்ஸகம

6. துட்டகைமுனுவின் தாயின் பெயர்.
   - i. விகாரமகா தேவி
   - ii. பார்வதி
   - iii. சுகுலா தேவி
   - iv. மித்தை

7. ஜேத்தவனராம விகாரையை அமைத்தவன்.
   - i. துட்டகைமுனு
   - ii. வலகம்பா
   - iii. மகாசேனன்
   - iv. தாதுசேனன்

8. அனுராதபுர கால இறுதி மன்னன்.

அருகிலுள்ள இலங்கைப் படத்தில் A, B, C, D, E, F ஆகிய இடங்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தீகவாபி, விஜிதகம, உருவெல, மகாதித்த, உபதிஸ்ஸகம, அநுராதபுரம்)

9. A ________________

10. B ________________

11. C ________________

12. D ________________

13. E ________________

14. F ________________

15. குப்தர் காலத்தில் பிரதேச நிருவாக அலகு எவ்வாறு அழைக்கப்பட்டது?

i. ஆயுக்த ii. புக்தி
iii. இராஜமத்தி iv. வலஹி

16. அஸ்வமேத யாகத்தை நடத்திய மன்னன்.

i. 1ம் சந்திர குப்தன்
ii. 2ம் சந்திர குப்தன்
iii. சமுத்திர குப்தன்
iv. குமார குப்தன்

17. அசோகனோடு தொடர்புபடாத ஒரு விடயம்.

i. சமயத் தூதுவர்களை 9 நாடுகளுக்கு அனுப்பியமை
ii. சாஞ்சி தூபியை அமைத்தமை
iii. இறுதியாக காந்தாரத்தைக் கைப்பற்றியமை
iv. மூன்றாவது பௌத்த மகாநாட்டை நடத்தியமை

18. A. பாடலிபுரத்திற்கு தலைநகரை மாற்றியமை
B. அங்கதேசத்தைக் கைப்பற்றியமை
C. மகா வீரரின் ஆதரவாளராக இருந்தமை
D. லிச்சவி அரசைக் கைப்பற்றியமை

இவற்றுள் அஜாத சத்ரு மன்னனோடு தொடர்பு பட்ட 2 விடயங்கள்.

i. AB ii. AC
iii. AD iv. BD

19. 'சோமபானம்' என்பது

i. இலைச் சாற்றிலிருந்து பிழிந்து தயாரிக்கப்பட்ட ஆரியரின் பானம்.
ii. இலைச் சாற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட மௌரியரின் பானம்
iii. வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் புனித நீர்
iv. எமது முன்னோர் பயன்படுத்திய மருத்துவ நீர்

20. ஆரியர் சமூகத்தில் வரியை அறவிட்டோர்.

i. நகர குத்திக ii. காமினி
iii. கிராமினி iv. கமிக

தரம் 11

பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

1. இலங்கையில் இரட்டை ஆட்சி இடம்பெற்ற காலம்.

i. *1796-1798* ii. *1798-1800*
iii. *1798-1082* iv. *1798-1805*

2. A - *1796* இல் நியமனம்
C - *1805*இல் பதவி இழப்பு
B - இராசகாரிய முறை ஒழிப்பு
D - கண்டி ஒப்பந்தத்தில் ஒப்பம்

மேற்கூறிய விடயங்களுள் ஆளுநர் நோத்துடன் தொடர்புபட்டவை.

i. Aயும் Bயும் ii. Aயும் Cயும்
iii. Aயும் Dயும் iv. Bயும் Cயும்

3. அருகில் படத்தில் இருப்பவரின் காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வு.

i. சட்டவாக்கக் கழகம் ஏற்படுத் தப்பட்டமை
ii. வாக்குரிமை அறிமுகப்படுத்த ப்பட்டமை
iii. படையெடுப்பு தோல்வியடைந்தமை
iv. இலங்கை முழுவதும் அந்நியர் வசமானமை

4. கண்டிக்கு நானே உரித்துடையவன் என்று கூறியவன்.

i. துரைசாமி ii. கண்ணுசாமி
iii. கீர்த்தி iv. சாமித்தம்பி

5. *1818* கிளர்ச்சியில் ஆங்கிலேயருக்கு சார்பாக நடந்துகொண்டவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. கெப்பிடிப்பொல
ii. மொகட்டல
iii. ரட்டராலே
iv. மொல்லிகொட

6. 1848 கிளர்ச்சியோடு தொடர்பில்லாத ஒருவர்

i. பிலிமத்தலாவ
ii. கொங்காலே கொடபண்டா
iii. வீரபுரன் அப்பு
iv. குடாபொல பிக்கு

7. 1910, 1920 ஆம் ஆண்டு யாப்புக்களில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் முறையே.

i. 04, 16 ii. 04, 15
iii. 08, 16 iv. 10, 16

8. டொனமூர் குழுவினர் இலங்கைக்கு வழங்காத ஒரு துறை.

i. கல்வி ii. உள் விவகாரம்
iii. வெளி விவகாரம் iv. விவசாயம்

9. சோல்பரி யாப்பில் நாமநிருவாகியாக செயல்பட்டவர்.

i. பிரதமர் ii. ஆளுநர்
iii. சபாநாயகர் iv. ஆளுநர் நாயகம்

10. A அரசுக்கழகம் D ஜனாதிபதி
B பிரதமர் E ஆளுநர்
C கீழ் சபை F ஆளுநர் நாயகம்

இவற்றுள் சோல்பரி யாப்பில் இடம் பெற்றவை.

i. ACD ii. ACDF
iii. BCF iv. BEF

11.

அ	ஆ
1. சிங்கபிட்டி கோப்பித்தோட்டம்	A மக்கலம்
2. கண்ணொறுவ கோப்பித்தோட்டம்	B எட்வட் பாண்ஸ்
3. கோப்பிச் செய்கை - புதிய நுட்பம்	C பட்லர்
4. நீர்ப்பாசனத் திணைக்களம்	D ஜோர்ஜ் பேட்

அட்டவணை 'அ'வுக்கு ஏற்ப 'ஆ'வைப் பொருத்தினால் சரியாக அமையும் விடை.

i. DBCA ii. DBAC
iii. DCBA iv. CBAD

12. கோப்பிச் செய்கை வெளிறல் நோயினால் பாதிக்கப்பட்ட ஆண்டு.

i. 1855 ii. 1868
iii. 1890 iv. 1881

13. கோப்பிச் செய்கை அழிவடைந்ததும் அறிமுகமான பயிர்.

i. இறப்பர் ii. தென்னை
iii. குயினைன் iv. சிங்கோனா

14. கந்தளாய்க் குளத்தை திருத்திய ஆளுநர்.

i. மக்கலம் ii. வில்லியம் கிரெகரி
iii. ஹென்ரிவோட் iv. வெஸ்ட் றிட்க்வே

15. தோட்டத் தொழிலாளர் இயக்கத்திற்கு தலைமை தாங்கியவர்.

i. AE குணசிங்க ii கோ. நடேச ஐயர்
iii. சதாசிவம் iv. லலி பெரேரா

16. வித்யோதய பிரவெனாவை ஆரம்பித்தவர்.

i. வலானே சித்தார்த்த தேரர்
ii. இரத்மலான தர்மாலோக தேரர்
iii. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கள தேரர்
iv. அநகாரிக தர்மபால

17. பௌத்த வாலிப சங்கத்தை உருவாக்கியவர்.

i. எப்.ஆர். சேனநாயக்கா
ii. டீ.பீ. ஜயதிலக
iii. ஒல்கொட்
iv. அநகாரிக தர்மபால

18. A 1915 இல் ஆரம்பமானது.
B 1919 இல் ஆரம்பமானது.
C முதலாவது தலைவர் சேர். பொன் அருணாசலம்
D முதலாவது தலைவர் சேர். பொன் இராமநாதன்

இலங்கை தேசிய இயக்கம் தொடர்பாக சரியான கூற்றுக்கள்.

i. Aயும் Bயும் ii. Aயும் Cயும்
iii. Bயும் Cயும் iv. Bயும் Dயும்

19. சிங்கள-முஸ்லிம் கலவரம் ஏற்பட்ட ஆண்டு.

i. 1919 ii. 1915
iii. 1918 iv. 1912

(28ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிது புதிதாகத் திட்டம் போடுங்கள்



ஜே.எம். அஸீம் (நளீமி) www.azeemzain.org

சிகாகோவின் பிரபலமான ஸ்டேட் ஸ்ட்ரீட்டில் ஒரு பயங்கரமான தீ விபத்து. வானம் புகையால் மறைந்து போயிருந்தது. பலரது கட்டடங்களையும் தொழிலையும் மட்டுமல்லாமல் நம்பிக்கையையும் சேர்த்தே எரித்து விட்டது அந்தத் தீ.

நம்பிக்கையை எரித்தவர்கள் சிகாகோவிலிருந்து பெட்டி, படுக்கைகளுடன் சிகாகோவே வேண்டாம் எனப் புறப்பட்டு விட்டனர். எத்தனை முறை எரித்தாலும் உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவைபோல் கம்பீரமான குரலில் தனக்குள் சொல்லிக் கொண்டார் மார்ஷல் பீல்ட்:

"ஜென்டில்மேன்! எத்தனை தடவை எரிந்து சாம்பலானாலும் இந்த இடத்தில் உலகில் மிகப் பெரும் வியாபார நிலையத்தை நிர்மாணிப்பேன்."

அவர் கட்டிய அந்த வியாபார நிலையம் பின்னர் தலை நிமிர்ந்து நின்றது.

இதுதான் வெற்றியாளர்களுக்கும் தோல்வியாளர்களுக்குமுள்ள வித்தியாசம். தோல்வியாளர்களுக்கு ஒரு தோல்வி போதும். வெற்றியாளர்களுக்கு எத்தனை தோல்விகள் வந்தாலும் தோல்வி துவண்டு போகுமே தவிர அவர்கள் தளரமாட்டார்கள்.

இலட்சியக் கனவுகளோடு வாழுங்கள். உங்கள் கனவை யாரும் எதுவும் கலைத்துவிடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். யாரும் என்றால் எந்த மனிதரும் உங்கள் கனவைக் கலைத்து விடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். எதுவும் என்றால் எந்த நிகழ்வும் உங்கள் கனவைக் கலைத்துவிடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். இந்த இலட்சியக் கனவை அடைவதற்கான திட்டம் உங்களிடம் இருக்கும். அதனைத் திட்டம் என்று சொல்லிவிட முடியாது. உதாரணமாக, நீங்கள் வைத்தியராக வர வேண்டும் என்பது உங்கள் இலட்சியக் கனவு. அப்படியென்றால் அதற்கான ஒரு திட்டத்தைப் போடுவதால் மட்டும் அதனை அடைந்து விட முடியாது. மாறாக, அதற்குப் புதிது புதிதாக திட்டங்கள் போட வேண்டும்.

நாம் விடும் தவறு இதுதான். வைத்தியராவது என்ற இலட்சியக் கனவுக்கு ஒரு திட்டம் போடுவோம். அது திட்டமிடல் விதிகளில் எதற்கும் ஒத்துவராது. (திட்டமிடல் விதிகளை பின்னர் பார்ப்போம்) திட்டமிடல் விதிகளுக்கு ஒத்துவராத திட்டம் எப்படி வெற்றியளிக்கும்?

புதிது புதிதாக திட்டமிடல் என்பது 02 விடயங்களைக் குறிக்கும்.

1. வெற்றி கிட்டும் வரை புதிது புதிதாகத் திட்டமிடுவது
2. வெற்றி கிட்டிய பின்னரும் புதிது புதிதாகத் திட்டமிடுவது

வெற்றி கிட்டும் வரை புதிது புதிதாக திட்டமிடுவது என்பதைப் பொறுத்தவரையில், முதலில் நாம் ஒரு திட்டத்தை வரைந்திருப்போம்; அது தோல்வியடையலாம் அல்லது தவறலாம். அதற்குக் காரணம் திட்டத்தில் உள்ள கோளாறு எனில், அதனைத் திருத்திக் கொண்டு மற்றுமொரு புதிய திட்டம் தீட்டுவது. இவ்வாறு அனுபவம் மூலம் தவறுகளைத் திருத்திக் கொண்டு புதிது புதிதாகத் திட்டம் தீட்டுவது.

வெற்றி கிட்டிய பின் புதிது புதிதாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் என்பது, வெற்றி என்பது முற்றுப் புள்ளி அல்ல. சாதனைகள் முடிவடைவதில்லை. அவை தொடர வேண்டும். எனவே, வெற்றி கிட்டியதும் திருப்தி அடைந்து விடாது மற்றொரு புதிய திட்டத்தை தீட்டிக் கொண்டு களமிறங்குங்கள். இவ்வாறு எப்போதுமே வெற்றி தோல்வி என்ற வேறுபாடின்றி தொடர்ந்தும் புதிய புதிய திட்டங்களை தீட்டிக் கொண்டு முன்னேறுவதைக் குறிக்கும்.

எனவே, இத்தகைய வெற்றித் திட்டங்கள் நிஜமாக நாம் திட்டமிடுவது மாத்திரமன்றி அவற்றை அடைய கடுமையாக உழைக்கவும் வேண்டும்.

ஆசை, ஐடியா, திட்டம், கனவு, நிஜம்

புதிய புதிய ஆசைகள் எமக்கு வருவது இயல்பானது. ஆனால், சிலருக்குத்தான் புதிய புதிய ஐடியாக்கள் வரும். அவர்களில் சிலரே அந்த ஐடியாக்களுக்குத் திட்டம் தீட்டுவர். வடிவம் கொடுக்க முனைவர். அந்த ஐடியாக் கனவு காண்பர். திட்டமிட்டபடி அந்த ஐடியா எப்படி நிஜமாகும் என்பதைக் கனவு காண்பர்; கற்பனை செய்வர். அவர்களுள் சிலர் அவை நிஜமாக உழைப்பர். அவர்களுள் சிலர் தோல்வி அடைவர். ஆனால் எந்தத் தடையையும் தாண்டி தமது ஆசைகளுக்கும் ஐடியாக்களுக்கும் கனவுகளுக்கும் வடிவம் கொடுத்து திட்டம் தீட்டி வெற்றி பெறுபவர்கள் வெகு சிலரே. அவர்களைத்தான் உலகம் போற்றும். அவர்களின் திட்டங்களைத்தான் உலகம் காணும்.

ஹென்றி போர்ட் தனது போர்ட் கம்பனியை ஆரம்பித்ததிலிருந்து புதிது புதிதாகத் திட்டம் தீட்டினார். அவை கிடைக்கும் வரை அயராது உழைத்தார். தோல்விக்குக் காரணம் நாம் மேற்கூறிய 05 கட்டங்களில் ஏதாவது ஒரு கட்டத்துடன் நின்று விடுவதே! எனவே, பொதுவாக நாம் கனவு நனவாகும் வரை அயராது உழைக்க வேண்டும்.

திட்டமிடல் தோல்வியடைய பொதுவான காரணம், திட்டவட்டமான இலக்கும் தீர்மானமும் தெளிவான திட்டமும் இன்மையே.

சிங்கப்பூரில் துவாஸ் என்ற இடத்தில் புதிய மின்நிலைய கட்டுமானப் பணி நடந்தது. 375 மெகாவாட் தயாரிக்கும் இரண்டு யுனிட்களைக் கட்டும் கான்ட்ராக்ட் ஆர்.ஐ என்ற ஜப்பானிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. நிஷிகாமி (Nishigami) என்ற ஜப்பானியர் தான் புதிய மின் நிலையத்தின் மொத்த கட்டுமானப் பணியின் திட்டமிடலுக்கும் பொறுப்பாளர்.

அவர் செய்த முதல் வேலை மின் நிலைய கட்டுமானப் பணியிலுள்ள A to Z வரையிலான எல்லா வேலைகளையும் பட்டியலிட்டு, ஒவ்வொரு வேலைக்கும் பொறுப்பானவர்களை அடையாளம் கண்டது. அப்படி அடையாளம் காணப்பட்டவர்களிடம் அவர் செய்யச் சொன்ன முதல் வேலை PPSS தயாரிப்பது. Procees Procedure Schedule Sheet என்பதன் சுருக்கமே PPSS. அதில் நீங்கள் செய்யப்போகும் எல்லா வேலைகளையும் வரிசைப்படுத்தி, ஒரு விஷயம் கூட விடாமல், துவக்கம் முதல் கடைசி வரை, ஒரு கதை மாதிரி எழுத வேண்டும். ஒரு வேலையை முடிக்க எவ்வளவு நாளாகும்; எத்தனை ஆட்கள், பொருட்கள் இயந்திரங்கள் தேவை; என்னென்ன இடைஞ்சல்கள் வரலாம்; அப்படி வந்தால் எப்படிச் சமாளிப்பது இப்படி எல்லா விபரங்களையும் Excel spread sheety ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதித் தயாரிக்க வேண்டும். அதை நிஷிகாமி மீளாய்வு செய்து, கேள்வி மேல் கேள்விகள் கேட்பார்.

உதாரணத்திற்கு, ஒரு போல்ட் பயன்படுத்துவதாக எழுதியிருப்போம். அதன் நீளமென்ன, குறுக்களவு என்ன, GI material அல்லது stainless steel ஆ, பொருத்தும் முறை என்ன, டிரில்லிங் மெஷின் பயன்படுத்துகிறோமா, எங்கிருந்து மின் தொடர்பைப் பெறுகிறோம்... இப்படி பல கேள்விகளை நிஷிகாமி கேட்பார். சம்பந்தப்பட்ட எஞ்சினியர் பதில் சொல்ல வேண்டும். ஒரு PPSS மீண்டும், மீண்டும் திருத்தப்படும். ஆக்க் கடைசியில், நிஷிகாமி ஒரு PPSS இற்கு ஒப்புதல் அளிப்பதற்குள் சம்பந்தப்பட்ட எஞ்சினியர் பல உறக்கமற்ற இரவுகளைக் கழிக்க வேண்டியிருக்கும்.

இதற்கான பலன் ஒரு வேலை துவங்குவதற்கு முன்பே அதற்கான எஞ்சினியர், தேவையான எல்லா விபரங்களையும் விரல் நுனியில் வைத்திருப்பார். தனக்குக் கீழ் வேலை செய்பவர்களுக்கு விளக்கிச் சொல்லிவிடுவார். கடைசி உதவியாளருக்குக்கூட தனது வேலையைப் பற்றி ஒரு தெளிவு வந்து விடும். இதுதான் திட்டமிடல். பல ஆயிரம் இயந்திரங்கள் இருக்கக்கூடிய இடத்தில், ஒரு சின்ன ஆணியைப் பொருத்துவது எப்படி என்றுகூட சிந்தித்துப் பார்க்கிற ஆழமான திட்டமிடல். ஆழமான திட்டமிடலின் மூலம், இந்த சாதனைக்கான ஆதார விதையை விதைத்தவர் நிஷிகாமி. இதுதான் திட்டவட்டமான இலக்கு. அதற்கான சரியான தீர்மானம். அதனை அடைவதற்குத் தெளிவான திட்டம். ஒவ்வொன்றையும் எப்படிச் செய்ய வேண்டும் என்ற தெளிவான திட்டம். ஒவ்வொரு கட்டமும் எவ்வாறு நடைபெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்; என்ன பிரச்சினை வரும்; எவ்வாறு எதிர்கொள்வது... எவ்வளவு அருமையான திட்டம்!!!

திட்டமல்ல: திட்டங்கள்

பொதுவாக திட்டமிடல் அல்லது திட்டம் ஒன்றை வரைதல் என்பதைத்தான் நாம் கேள்விப்பட்டிருப்போம். வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் அல்லது சாதித்தவர்கள் வரலாற்றை ஆராய்ந்தால் அவர்களது வாழ்வில் திட்டம் அல்ல, திட்டங்கள் என்ற தொடர் செயற்பாடு நிகழ்ந்துதான் அவர்களது கனவு நனவாகி இருப்பதையும் சாதனை சாத்தியமாகி இருப்பதையும் கண்டு கொள்ளலாம். பலர் இதனை அறியாதுள்ளனர்.

புதிது புதிதாகத் திட்டமிடும்போது நாம் குரங்கு மனம்போல் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு அர்த்தமற்ற முறையில் தாவக் கூடாது. ஒரு திட்டத்தை முதலில் தீட்டுவது, பின்னர் தோன்றும் மற்றொரு யோசனைக்கு வேறொரு திட்டத்தைத் தீட்டுவது மீண்டும் காரணமின்றி திட்டத்தை மாற்றுவது எனச் செயற்படுவது அர்த்தமற்றது. ஆபத்தானது. புதிது புதிதாகத் திட்டமிடுவது என்பது இதுவல்ல. மாறாக, ஒரே ஒரு திட்டத்தை வரைந்து அதன்படி மாத்திரமே செயலாற்றிக் கொண்டிருக்காமல் தேவை, முன்னேற்றம், அடைவு, மாற்றம் என்பவற்றிற்கேற்ப தேவையான திட்டங்களைப் புதிது புதிதாகத் தீட்டுவதை இது குறிக்கும்.

புதிய திட்டம் என்பது முதலாவது திட்டத்தின் தொடராக இருக்க வேண்டும். அல்லது அடுத்த கட்டமாக இருக்க வேண்டும். முதலாவது திட்டம் தோல்வியடைந்தால் அதிலிருந்து கற்றுக் கொண்ட திட்டமாகவும் முதலாவது திட்டம் வெற்றி பெற்றால் அடுத்த கட்டத்திற்கு முன்நோக்கி நகர்வதற்கான அடுத்த திட்டமாகவும் இருக்க வேண்டும். உங்கள் வளர்ச்சியில் உங்கள் நிறுவனத்தின் வளர்ச்சியில் இத்தகைய புதிய புதிய திட்டங்கள் அவசியம். இன்று தனிநபர்களும் நிறுவனங்களும் புதிய புதிய திட்டங்களைப் போட்டுக் கொண்டுதான் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

புதிய புதிய திட்டங்கள்தான் புதிய புதிய கண்டுபிடிப்பாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொருவரினதும் புதிய புதிய ஆசைகள்தான் புதிய புதிய ஐடியாக்களாக பளிச்சிடுகின்றன. புதிய புதிய ஐடியாக்கள் புதிய புதிய திட்டங்களாகத் தோன்றி நிஜமாகவே வடிவம் பெறுகின்றன. ஒவ்வொருவரினதும் புதிய புதிய ஆசைகளினதும் ஐடியாக்களினதும் திட்டங்களினதும் நிஜவடிவமாகவே நாம் காணும் ஈபிள் டவர் போன்ற பிரமாண்டமான கட்டடங்களும் ஆகாய விமானம், நவீன ரக வாகனங்கள், பிரமாண்டமான கப்பல்கள் ஏராளமான போக்குவரத்து சாதனங்களும் தொழிநுட்ப முன்னேற்றங்களும் தொடர்பாடல் சாதனங்களும் காணப்படுகின்றன.

ஒவ்வொருவருடைய புதிய புதிய திட்டங்களும்தான் இன்றைய உலகை புதிது புதிதாக அலங்கரித்திருக்கின்றன. இவ்வாறான புதிய புதிய ஆசைகள் உங்களுக்கும் வரும். புதிய புதிய ஐடியாக்கள் உங்களுக்கும் பளிச்சிடும். சிலபோது புதிய புதிய திட்டங்களும் உங்களுக்குள் உருவாகும். ஆனால், மிக அரிதாகவே அவை நிஜமாகின்றன. உங்கள் புதிய திட்டங்களைக் கனவு காணும் நீங்களும் அவற்றை நிஜமாக்கினால்...?

வெற்றி கிட்டும் வரை புதிய புதிய திட்டங்கள், வெற்றி கிட்டிய பின்னும் வெற்றியைப் பன்மடங்காக்க புதிய புதிய திட்டங்கள் என்பது நாம் அறியாத மந்திரமல்ல. பொதுவாக பலர் இவ்வாறு செயற்படுவதையும் உலகில் பொதுவாக இவ்வாறு புதிய புதிய திட்டங்கள் தீட்டப்படுவதையும் நீங்கள் அறிந்துதான் இருக்கிறீர்கள். காரணம் புதிய புதிய திட்டங்கள் வெற்றியளித்தால் அவை பிரபல்யமாகும். ஆனால், புதிய புதிய திட்டங்கள் என்றால் என்ன என்பதைச் சரியாக அறியாமல் அவை நிஜமாகும் விதிகளை அறியாமல் அவற்றை செயற்படுத்தாமல் இருப்பதுதான் நாம் புதிய புதிய திட்டங்கள் தீட்டி வெற்றி பெறாமல் இருக்கக் காரணம்.

திட்டங்கள் தோல்வி அடைதல்

தோல்வி என்றால் என்ன என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். திட்டம் தீட்டினால் ஒன்று வெற்றி கிட்டும் அல்லது தோல்வி. வெற்றி என்பது நாம் நிர்ணயித்த இலக்கை அடைவது என்று கூறலாம். அந்த இலக்கை அடைந்து விட்டால் வெற்றி தான். ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குள் அடைய வேண்டும், போட்டிக்கு யாராவது வந்தால் அவர்களை முந்திக் கொண்டு நாம் அடைய வேண்டும் என்ற வேறு விடயங்களும் இருக்கின்றன.

அந்த வெற்றி கிடைக்காமல் போனால் அது தோல்வி. வெற்றி கிடைக்கவில்லை என்பதுதான் தோல்வி என்றால் அந்த வெற்றியைக் கிடைக்கச் செய்யலாம் அல்லவா? எனவே, தோல்வி என்பது நிரந்தரமானதல்ல என்பதையும் அது வெற்றியை நோக்கிய பயணப் பாதையில் தவறுதல் என்பதையும் புரிந்து கொள்ளுங்கள்.

பொதுவாக தோல்வி என்பதை நாம் இங்கு விளக்கவில்லை. திட்டங்கள் தோல்வி அடைதல் என்ற சிறிய பகுதியை மாத்திரமே பேசுகின்றோம். இதனை

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கொண்டு தோல்வி என்பதற்காக முழுமையான வரைவிலக்கணத்தை வகுத்து விடாதீர்கள். திட்டங்கள் தோல்வி அடைதல் அல்லது தவறுதல் என்பது யதார்த்தமானது என்பதையும் அவற்றை எவ்வாறு வெற்றித் திட்டங்களாக மாற்றுவது என்பதையுமே நாம் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

தற்காலிகத் தோல்விகள்

திட்டம் போட்டு நீங்கள் செயற்படுகின்றபோது தோல்வியடையக் கூடும். அப்படியென்றால் உங்கள் திட்டம் தோல்வியடைந்துவிட்டது. எனவே, நீங்கள் தோற்று விட்டீர்கள் என்று அர்த்தமா?

தோல்வியடைந்த திட்டத்தை வெற்றிக்கான திட்டமாக மாற்ற வேண்டும். அல்லது அந்தத் திட்டத்தையே கைவிட்டு விட்டு இலக்கு நோக்கிய வேறொரு திட்டம் போட வேண்டும். இதுதான் புதிது புதிதாகத் திட்டமிடல் என்பது. இது வெறுமனே தோல்வி அடைகின்றபோது மட்டுமல்லாமல், வாழ்வில் எப்போதுமே புதிது புதிதாகத் திட்டமிடப் பழகிக் கொள்ள வேண்டும்.

உங்களுக்குத் தோன்றும் யோசனைகள் தான் உங்கள் திட்டங்களின் கருக்கள். உங்கள் ஆசைகள் தான் அந்தக் கருக்களை வளர்க்கும் போதனை. அதற்காக நீங்கள் வரையும் திட்டங்கள்தான் அவை வளர்வதற்கான களம். களத்தை நீங்கள்தான் தயார்படுத்த வேண்டும்.

உங்களுடைய முதலாவது திட்டம் தோல்வியடைந்து விட்டால் புதிய திட்டத்தை செயற்படுத்துங்கள். அதுவும் காலைவாரிவிட்டால் சளைக்காமல் இன்னுமொரு திட்டத்துடன் களமிறங்குங்கள். வெற்றியைக் கொடுக்கும் திட்டம் உங்கள் கைக்குக் கிடைக்கும் வரை மாற்றுத் திட்டத்தைப் பின்பற்றுவதில் நீங்கள் தளர்ந்து விடக்கூடாது. இந்தக் கட்டத்தில் பின் வாங்கி விடுவதால்தான் அநேகர் தோற்றுப் போகிறார்கள். உங்கள் திட்டங்கள் மண் கவ்வும் போதெல்லாம் தற்காலிகத் தோல்வி என்பது நிரந்தரத் தோல்வி அல்ல என்பதை நினைவில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் திட்டங்கள் வலுவாக இல்லாவிட்டால் தோல்வி வரலாம். மறுபடியும் புதிதாகத் திட்டம் போடுங்கள். மறுபடியும் முயற்சியைத் தொடருங்கள். இதுதான் வெற்றிக்கான வழி. தற்காலிகத் தோல்வி சொல்லும் ஒரே விஷயம், திட்டத்தில் கோளாறு உள்ளது என்பதுதான். -நெப்போலியன் ஹில்-

தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்

புதிது புதிதாகத் திட்டம் போடவுள்ள உங்களுக்கு இரண்டு பண்புகள் தேவை. ஒன்று முன்னைய அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். மற்றது உரிய நேரத்தில் உரிய தீர்மானத்தை எடுக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

கற்றுக்கொள்வதைப் பொறுத்தவரை, நீங்கள் தொடர் திட்டங்கள் தீட்டும்போது தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளவும் அவ்வாறான தவறுகள் இனிமேல் நிகழாதவாறும் திட்டமிட வேண்டும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

"ஒரு முஃமின் ஒரு பொந்தில் இரண்டு முறை தீண்டப்பட மாட்டான்"

நாம் ஒரே தவறை மீண்டும் மீண்டும் செய்வது அறிவுடைமை யாகாது. எனவே, திட்டமிடுகின்றபோது முன்னைய அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வது மிக அவசியம்.

திட்டங்கள் வெற்றி பெற தீர்மானங்கள்

உரிய நேரத்தில் தவறான தீர்மானம் எடுப்பது தவறு.

காலம் தவறி உரிய தீர்மானம் எடுப்பது வெள்ளம் கடந்த அணை பின் போல.

உரிய நேரத்தில் உரிய தீர்மானம் எடுக்க வேண்டும். அதுதான் உரிய பயனைத் தரும். சரியான நேரத்தில் எடுத்த சரியான முடிவுகள் சரித்திரத்தையே மாற்றியிருக்கின்றன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் சிறந்த தீர்மானங்களின் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. திட்டங்களுக்கு அடிப்படையானது தீர்மானமே! திட்டமிடுகின்றபோது ஏன் திட்டமிட முன்னரும் திட்டமிட்ட பின்னரும் கூட பல விடயங்களைத் தீர்மானிக்க வேண்டியேற்படும். விரைவாகவும் சரியாகவும் உரிய நேரத்திலும் தீர்மானம் மேற்கொள்ள முடியாமல் போனால் எந்தப் பெரிய திட்டத்தை வைத்தும் பலனில்லாமல் போகும்.

துணிச்சலாக முடிவெடுங்கள்

முடிவெடுக்கும்போது நீங்கள் துணிச்சலாக முடிவெடுக்க வேண்டும். துணிச்சலாக முடிவெடுக்கும்போது சில விடயங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டும். சாத்தியமான எந்த விடயம் என்றாலும் உங்களால் முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் வேறு எதனைப் பற்றியும் யோசிக்காது துணிச்சலாக முடிவெடுங்கள்.

(24ஆம் பக்கத் தொடர்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச தாதியர் தினம்

(International Nurses Day)

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு மே 12 ஆம் திகதியும் சர்வதேச தாதியர் தினம் (International Nurses Day) கொண்டாடப்பட்டு வருகின்றது. தாதிகள் சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்பும் அவர்களின் சேவைத் தியாகங்களையும் சிறப்பாக நினைவுகூர இத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தாதியர் அமைப்பு (International Council of Nurses) இத்தினத்தை 1965ஆம் ஆண்டிலிருந்து நினைவு கூருகிறது. 1953இல் ஐக்கிய அமெரிக்காவின் அரச சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியான டொரத்தி சதரலாண்ட் (Dorothy Sutherland) என்பவர் இத்தினத்தை தாதியர் தினமாக அறிவிக்க வேண்டுமென விடுத்த அழைப்பை அன்றைய ஜனாதிபதி ஐசன்ஹோவர் நிராகரித்துள்ளார். இருப்பினும் 1965ஆம் ஆண்டிலிருந்து நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த புளோரன்ஸ் நைட்டிங்கேல் அவர்களின் பிறந்த நாளான மே 12 ஆம் நாளை சிறப்பாக நினைவுகூர முடிவு செய்யப்பட்டது.

இங்கிலாந்தில் ஆண்டுதோறும் மே 12ஆம் நாளில் லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் (Westminster Abbey) சம்பிரதாயபூர்வமாக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

ஒரு மருத்துவமனையின் இன்றியமையாத ஊழியர்கள் தாதியர்கள் என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட ஒரு விடயம். இன்றைய மனித சமூகத்துக்கான தாதிமாரின் சேவையை இலகுவாக மதிப்பிட்டுவிட முடியாது. சாதாரண வைத்திய சேவைகளிலிருந்து யுத்தகால வைத்தியசேவைகள் வரை ஒவ்வொரு கட்டத்திலும் இவர்களது சேவைகள் வியாபித்துக் காணப்படுகின்றது. பக்குவமாகவும் அதேநேரம், பொறுப்புள்ள முறையிலும் மனித அசிங்கங்களைக்கூட கவனத்திற் கொள்ளாமல் உணர்வோடு உரசி இவர்கள் ஆற்றும் சேவை மெச்சத்தக்கதே. இந்த அடிப்படையில் இவர்களின் சேவைகளை மனித சமூகம் நினைவுகூர வேண்டியது சமூகத்தின் ஒரு கட்டாயக் கடமையாகவும் உள்ளது.

நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்துத் தாதியான புளோரன்ஸ் நைட்டிங்கேலை (Florence Nightingale), மே 12, 1820 - ஆகஸ்ட் 13, 1910) மறந்துவிடமுடியாது. தாதித் தொழிலின் புனிதத்துவத்தை உணர்த்திய இவர் போரில் காயம்பட்ட வீரர்களுக்கு ஓய்வின்றி மருந்திட்டு சேவை செய்தார். தாதிகளுக்கான பயிற்சிப் பள்ளியையும் இவரே முதலில் ஆரம்பித்தார். விளக்கேந்திய சீமாட்டி, கை விளக்கேந்திய காரிகை (The Lady with the Lamp) என்று அனைவராலும் போற்றப்பட்ட இவர் ஒரு எழுத்தாளரும், புள்ளி விபரவியலாளரும் ஆவார்.

புளோரன்ஸ் நைட்டிங்கேல் 1883 இல் விக்டோரியா அரசியிடமிருந்து அரச செஞ்சிலுவை விருது பெற்றார். 1907 இல் புளோரன்ஸின் அரும்பெருஞ் சேவைகளை அறிந்த இங்கிலாந்து மன்னர் பாம் எட்வேட் 'Order of Merit' வை எனும் பட்டத்தை வழங்கி புளோரன்ஸைக் கௌரவித்தார். உலகில் இப்பட்டத்தைப் பெற்ற முதலாவது பெண்மணியெனும் பேரும் புகழும் இவருக்கே உரித்தாகும்.

மருத்துவ மற்றும் தாதியியற் துறைகளிலேயே இவர் புகழ் பெற்றிருந்தைப் போலவே இங்கிலாந்தின் பெண்ணியத்திலும் முக்கியமான ஒருவராகத் திகழ்ந்தார். 1850 - 1852 காலப்பகுதியில் சுயபரிசோதனை, உயர்குடி மற்றும் தன் குடும்பப் பெண்களின் வாழ்க்கை பற்றி யோசித்த புளோரன்ஸ் நைட்டிங்கேல், தனது சிந்தனைகளை சமய மெய்யியல் தேடலுடையவர்களுக்கான சிந்தனைகள் என்ற நூலாக எழுதினார். இந்நூல் மூன்று பாகங்களுடையது. மூன்றும் சேர்த்து இந்நூல் வெளியிடப்படவில்லையாயினும் கசான்ட்ரா எனும் ஒரு பகுதி ரே ஸ்ட்ரக்கி என்பவரால் 1928ம் ஆண்டு வெளியிடப்பட்டு த காஸ் (The Cause) எனும் பெண்ணியல் வரலாற்று நூலில் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டது.

எனவே இத்தினத்தில் புளோரன்ஸ் நைட்டிங்கேலை நினைவு கூரும் அதேநேரத்தில் உலகெங்கிலும் சேவை புரியும் தாதியர்களின் மகத்தான பணிகளையும் கண்ணியப்படுத்தி கௌரவிப்பதானது அவர்களுக்கு உலக மக்கள் வழங்கும் அதியுயர் அங்கீகாரமாகும்.

- பீ.எம். புன்னியாமீன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் ஆளுமையும் கற்றல் வழிமுறைகளும்

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)



நுண்ணறிவை அடிப்படையாக வைத்து மாணவர்களின் கற்றல் வழிமுறைகளும் ஆசிரியர்களின் கற்பித்தல் வழிமுறைகளும் மாறுபடுகின்றன என காட்னரின் நுண்ணறிவுக் கோட்பாடு விளக்குகின்றது. இது தொடர்பாக அகரத்தின் கடந்த இதழ்களில் உங்களுடன் கலந்துரையாடப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். இந்த இதழில் மாணவர்களின் ஆளுமை வித்தியாசத்திற்கேற்ப அவர்களுடைய கற்றல் வழிமுறைகளும் மாறுபடும் விதத்தினை நோக்குவோம்.

ஆளுமை என்பதை சாதாரண மக்கள் பல்வேறு கருத்துக்களில் பயன்படுத்துகின்றனர். ஆளுமை என்பதற்குத் திட்டவட்டமான வரைவிலக்கணம் கொடுப்பது கடினம். உளவியலாளர்கள் இது தொடர்பில் பல வரைவிலக்கணங்கள் முன்வைத்துள்ளபோதும், "ஒருவரது ஒன்றிணைந்த நடத்தை அவருடைய ஆளுமை" எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். அது அவருடைய பரம்பரைத் திறன்களையும் சூழலின் தாக்கங்களையும் கொண்டதாகும். அது அவருடைய உடலமைப்பு, நடத்தைக் கோலங்கள், கவர்ச்சிகள், மனப்பாங்குகள், உளத்திறன்கள் விழுமியங்கள், சொற்கள், சொல்லும் முறை, பல்வேறு சூழ்நிலைகளிலும் வெளிக்காண்பிக்கும் தன்னம்பிக்கை மற்றும் பல்வேறு இயல்புகளின் முழு அமைப்பாகும்.

ஆளுமை வகைகளும் கற்றல் வழிமுறைகளும்

உளவியலாளர்கள் உடலியல் இயல்புகளையும் உளவியல் இயல்புகளையும் கொண்டு ஆளுமை அடிப்படையில் ஆட்களைப் பலவகையாக வகுத்துள்ளனர். "கார்ள் ஜங்" எனும் உள மருத்துவர் ஒருவருடைய ஆளுமையை நான்காக வகைப்படுத்தும் அதேவேளை அவர்களுடைய ஆளுமைப் பண்புகளுக்கேற்ப கற்றல் வழிமுறைகளும் வேறுபடுவதைத் தெளிவுபடுத்துகிறார்.

1. புறமுக ஆளுமை எதிர் அக முக ஆளுமை
2. மனக்கிளர்ச்சி எதிர் உள்ளுணர்வு
3. சிந்தித்தல் எதிர் உணர்தல்
4. எடைபோடுதல் எதிர் அவதானித்தல்

இக்கட்டுரை முதலாவது வகையான ஆளுமை வகையைக் கொண்டுள்ளவர்களின் இயல்புகள் மற்றும் கற்றல் வழிமுறைகளை விளக்குகிறது.

புற முக ஆளுமை எதிர் அகமுக ஆளுமை (Extraversion vs. Introversion)

இத்தகைய ஆளுமையைக் கொண்டவர்கள் 'அகமுகி' என்றும் 'புறமுகி' என்றும் அழைக்கப்படுகிறார்கள். இவர்களுடைய ஆளுமைப் பண்புகள், கற்றல் வழிமுறைகளை மற்றும் கற்றல் சார் பண்புகளை தனித்தனியாக நோக்குவோம்.

அகமுகி ஆளுமைப் பண்புகள்

- கலகலப்பாகக் கதைத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கவலையின்மை
- கூச்சப்படாமை
- சினேகிதமுடமை
- பிறருடன் செயலாற்ற விருப்பு
- தனது உடமைகளை பொருட்படுத்தாமை

கற்றல் வழிமுறை

'கார்ள் ஜங்' கினுடைய கற்றல் வழிமுறையின் முதலாவது அம்சமானது கற்பவர்கள் எவ்வாறு வெளியுலகுடன் தொடர்புபடுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அகமுக ஆளுமைப் பண்புகளைக் கொண்ட மாணவர்கள் அடுத்த மாணவர்களிடமிருந்து சிந்தனைகளையும் ஊக்க சக்தியையும் உருவாக்கிக் கொள்வதில் சந்தோசமடைகின்றனர். அவர்கள் மாணவர்களுடன் சமூகமயமாவதையும் குழுவாக இணைந்து கற்பதையும் அதீத விருப்பமாக ஆக்கிக் கொள்வதுடன் அதை முன்னுரிமைப்படுத்தவும் செய்கின்றனர். இத்தகையவர்கள் குறிப்பிட்ட ஒரு பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என அடுத்தவர்களுக்குக் கற்றுக் கொடுத்தல், குழுச் செயற்பாடு மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதை மையப்படுத்திக் கற்றல் போன்ற தங்களுக்கு நன்மைகளை ஈட்டித் தரக் கூடிய கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

நீங்கள் மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதில் மகிழ்ச்சியடைகிறீர்கள், குழு வேலைகளில் ஈடுபடுட்டு அனுபவத்தின் மூலமாகக் கற்றுக் கொள்கிறீர்கள் எனின், நீங்களும் அகமுக ஆளுமையைக் கொண்ட மாணவராவீர். உலகில் சுமார் 60% மாணவர்கள் அகமுக ஆளுமை கொண்ட பயிலுனர்களாவர்.

இவர்களின் கற்றல் சார் பண்புகள்

- நேரடி அனுபவத்தின் மூலம் சிறந்த முறையில் படிப்பர்.
- ஒரு குழுவிலுள்ள ஏனையவர்களுடன் இணைந்து செயலாற்றுவதை சந்தோசமாக எடுத்துக் கொள்வர்.
- வெளிச் சூழல், வளங்களிலிருந்து தமது கருத்துக்கள், சிந்தனைகளை உருவாக்கிக் கொள்வர்.
- தலைமை தாங்குதல், பங்கெடுத்தல் மற்றும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தல் போன்றவற்றில் ஆர்வமாக இருப்பர்.
- ஏனையவர்களின் வழிகாட்டலில் தங்கியிராது சரியான பாதையில் முன்னேறிச் செல்வர்.

புறமுகி ஆளுமைப் பண்புகள்

- கதைப்பது குறைவு
- கவலைப்படல்
- கூச்சப்படல்
- தனிமை
- தனியாகப் பணியாற்ற விருப்பம்
- தனது உடமைகளில் அதிக கவனம்

கற்றல் வழிமுறை

புறமுகி ஆளுமை கொண்ட பயிலுனர்களும் சோஸியலாகப் பழகக் கூடியவர்களாக இருந்தபோதும் தமது பிரச்சினைகளைப் பிறருடன் கலந்தாலோசித்து மற்றவர்களுடைய உதவியைப் பெற்றுக் கொண்டு தீர்ப்பதிலும் பார்க்க தாமாகவே தீர்த்துக் கொள்ள விரும்புவர். இத்தகைய மாணவர்கள், அதிகமாகச் சிந்தித்தல், தங்களையே பிரதிபலித்துப் பார்த்தல், கோட்பாடு ரீதியான விளக்கங்களை முன்வைத்தல் போன்ற உள்ளார்ந்த வளங்களிலிருந்து தமது சிந்தனைகள் மற்றும் ஊக்க சக்திகளை உருவாக்கிக் கொள்கின்றனர்.

இத்தகையவர்கள் புதியதொரு திறனை, விடயத்தை முயற்சித்துப் பார்ப்பதற்கு முன்னர் அது தொடர்பாக சிந்தித்துப் பார்ப்பதை விரும்புவர். ஒரு சிந்தனையை உள்வாங்கி அதைப் பலமுறை ஒத்திகை பார்த்து அதைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள தங்களைப் பலமுறை தயார்படுத்திய பின்பே அவ்விடயம் தொடர்பில் பேசுவர். திடீரென ஏதாவது ஒரு விடயத்தைப் பேசவோ முன்வைக்கவோ வேண்டப்படும்போது தாம் அவ்விடயத்தைச் சரியாக நிறைவேற்றவில்லை, நிர்ப்பந்தமாகவே இதைச் செய்துள்ளோம் எனக் கூறுவர். இவர்கள் தமது சொந்த உணர்வுகள், ஊக்கங்கள் மற்றும் மனோநிலைகளை விளங்கிக்கொள்ளும் ஆற்றலுள்ளவர்களாக இருப்பர்.

நீங்கள் தனிமையில் படிப்பதை, தனியாக செயற்படுவதை விரும்புகிறீர்கள் எனில் நீங்கள் பெரும்பாலும் அகமுக ஆளுமையைக் கொண்ட மாணவராவீர். இத்தகையவர்கள் உலகில் 40% உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் கற்றல்சார் பண்புகள்

- தனிமையில் படிக்க, வேலை செய்ய விரும்பு வர்.
- உள்ளார்ந்த வளங்களிலிருந்து தமது கருத்துக்கள், சிந்தனைகளை உருவாக்கிக் கொள்வர்.
- செவிமடுக்க, ஒன்றைப் பார்த்து அதைப் பிரதி பலிக்க ஆசைப்படுவர்.
- புதியதொரு திறனை, செயற்பாட்டைச் செய்ய முயற்சிக்க முன்னர் அத்துறையில் உள்ளவர் களை அவதானிக்க விரும்புவர்.

இவ்விரு இயல்புகளையும் கொண்டவர்கள் 'இரு முகிகள்' என அழைக்கப்படுகின்றனர். ஒரு சிலரே அதிகளவு புறமுகிகளாகவும் அதிகளவு அகமுகிகளாகவும் உள்ளனர். சந்தர்ப்பத்திற்கு இவ்விருவகையான கற்றல் வழிமுறைகளும் தேவைப்படுகின்றன. எனவே, தான் எவ்வகையான ஆளுமைப் பண்பைக் கொண்டவர் என்பதை அவதானித்து சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நிறையப் பிரயோசனங்களைப் பெற்றுக்கொள்ள அடுத்த ஆளுமைப் பண்புகளையும் பெறுவதற்கு முயற்சிப் பதுடன் தன்னிடமுள்ள பண்புகளைப் பிரயோச னமுள்ள வகையில் பயன்படுத்தவும் நாம் முயற்சிப் போமானால் கற்றலில் எண்ணிலடங்காப் பயன்க ளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வரலாறு... (20ஆம் பக்கத் தொடர்...)

விடைகள் 10ம் தரம்

1.	ii
2.	iv
3.	i
4.	iv
5.	iv
6.	i
7.	iii
8.	ii
9.	உபதிஸ்ஸகம
10.	அநுராதபும்
11.	விஜிதகம
12.	உறுவெல
13.	தீகவாபி
14.	மகாதித்த
15.	ii
16.	iii
17.	iii
18.	iii
19.	i
20.	iii

விடைகள் 11ம் தரம்

1.	iii
2.	iv
3.	iv
4.	i
5.	iv
6.	i
7.	i
8.	iii
9.	iv
10.	iii
11.	i
12.	ii
13.	iv
14.	ii
15.	ii
16.	iii
17.	ii
18.	iii
19.	ii
20.	iv

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டர் பாடல்

பகுதி iii (பெரிய வினா) தொடர்ச்சி

வினா:

'குத்துக்கட்டை மேலேறி...' என்ற பாடலினை அடிப்படையாகக் கொண்டு;

அ) இப்பாடலிலுள்ள மலையகப் பேச்சு வழக்குச் சொற்களை எழுதுக.

ஆ) மலையகப் பெண் ஒருத்தியின் காதல் வயப் பட்ட நிலை சித்திரிக்கப்படுமாற்றினை துலக் குக.

பாடல்:

குத்துக்கட்டை மேலேறி
கொழுந்து வெத்தலை போடயிலே
கைபுடி லேஞ்சு கண்டு என்
கள்ளமனம் துள்ளுதையா!

காலிலேயும் வெள்ளிமிஞ்சி
கழுத்திலேயும் தங்கக்காரை
மேலிலேயும் வெள்ளி லேஞ்சு
வேலை செய்யக் கூடலியே!

பணிய லத்துச் சாவல்
பாசமுள்ள வெள்ளச் சாவல்
காலுவளர்ந்த சாவல்
கண்டாலும் பேசுதில்லை!

கல்வாத்துக்காரப்பையா
கத்தி வெட்டும் பாண்டி மன்னா
கத்தி என்ன மின்னுறது உன்
கவ்வாத் தென்ன பிந்துறது!

முன்னூறு ஆளுக்குள்ள
முள்ளுக்குத்தும் என் சாமி
முள்ளு மூணும் மண்ணுக்குள்ள
முழிக ரெண்டும் என்மேல!

விடை

அ) வெத்தல, போடயிலே, கைபுடி, லேஞ்சு, கூடலியே, சாவல், வெள்ள, காலு, பேசுதில்லை, மின்னுறது, பிந்துறது, முன்னூறு, முள்ளு, மூணும், மண்ணுக்குள்ளே, முழிக

ஆ) நாட்டர் பாடல்களில் ஒன்றான 'குத்துக்கட் டை மேலேறி...' என்று தொடரும் பாடல் மிகவும் இரசனையுள்ள பாடலாகவுள்ளது. மலையக நாட்டார் பாடலில் ஒன்றான இது காதல் வயப்பட்ட பெண்ணொருத்தியின் மனோ நிலையைப் படம் பிடித்துக் காட்டு கிறது.

இப்பாடலின் முதலாவது பகுதியை நோக்கு மிடத்து குத்துக்கட்டையில் ஏறியிருந்து கொழுந்து வெற்றிலை போடும் தன் காதலனின் அழகைக் கண்டு அவள் மனம் துள்ளும் நிலை புலப்படுகிறது. காலில் வெள்ளி மிஞ்சியும், கழுத்தில் தங்க அணியும், மேலில் வெள்ளை லேஞ்சியும் அவன் அணிந்திருப்பதாக பாடுவ தன் மூலம் அவளது விழிமயக்கம் புலப்படு கிறது.

தான் நேசிக்கும் தலைவன் தன்னை கண்டும் பேசாமையை மிகவும் சூசகமாகப் பாடும் விதம் நயத்திற்குரியது. 'காலுவளர்ந்த சாவல் கண்டாலும் பேசுதில்லை' எனப் பாடி அவன் தன்னுடன் பேச வேண்டுமென எதிர்பார்க்கும் நிலை புலப்படுகிறது.

பாண்டி மன்னனின் மின்னும் கத்தி ஒரு நொடிப்பொழுதும் பகைவரை வெட்டப் பிந் தாது. ஆனால், உன் கத்தி பிந்துவது உன் கவ னம் என் மேலேயிருப்பதால்தான் எனவும் பாடுகிறாள்.

பேசாமல் இருந்தால் என்ன? உன் கவனம் என் மீதுதானே என மனதுக்குள் எண்ணிப் பாடுதல்:

"முன்னூறு ஆளுக்குள்ள
முள்ளுக்குத்தும் என் சாமி
முள்ளு மூணும் மண்ணுக்குள்ள
முழிக ரெண்டும் என் மேல"

என்று விரும்பு காதலனின் பார்வை தன்மீதி ருப்பதைக் கூறுகிறாள்.

இவ்வாறாக மலையகம் பெண்ணொருத்தி தன்னுடைய காதல்வயப்பட்ட மனநிலை யைப் பாடுவதாக இப்பாடல் அமையப் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. கல்லாதவனுடைய அறிவுடைமை ஏதோ ஒரு வகையில் மிக நன்றாக இருந்தாலும் கற்றோர் அதை அறிவுடைமையாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

02. இராமச் சந்திர கவிராயர். எதுகை அணி காணப்படுகிறது.

03. கசாப்புக்காரன் பெற்றோரைப் பராமரித்தல், எந்த வேலையையும் இழிவாக நினைப்ப தில்லை.

04. உவமானம் உறுபுலியாகவும், உவமேயம் முயற்சி மிக்கோரையும் இப்பாடல் கொண் டுள்ளது. எதையும் அற்பமென எண்ணாது முயற்சியோடு வாழவேண்டுமெனக் கூறுகிறது. வலிமையான புலி சிறு தவளையேனும் பிடித்து உண்டு பசிபோக்கும். அதுபோல கிடைக் கின்ற தொழிலை உளப் பூர்வமாக ஏற்று செய்ய முனைவோம் என்கிறது.

05. பாண்டிய மன்னன்

06. ஔவையார், பூதப் பாண்டியன் பெருந்தேவி யார், மங்கையர்க் கரசியார்.

07. வரதன்

08. கம்பரால், சோழ மன்னனுக்கு

09. வியாத கீதை

10. இராமவதாரம், ஏரெழுபது, கம்பராமாயணம்

வினாத் தொகுப்பு 06 விடைகள்

01. அ) கொடுங்கோன்மை

ஆ) தன் நாட்டில் நடக்கும் தீமைகளை தினந் தோறும் ஆராய்ந்து அதற்குரிய நடவடிக் கைகள் எடுக்காத தலைவன் (மன்னன்) நாடு, நல்ல பயன்களை இழக்கும்.

02. நல்ல மாட்டுக்கொரு சூடு, நல்ல பிள்ளைக் கொரு சொல்

03. ஆற்றிலே அள்ளுண்டு போனால் கால் சிறு நண்டும் அதட்டிப் பார்க்கும்.

04. குஞ்சம்மாளினால், தம்பிக்குக் கூறப்பட்டது.

05. அ) புகையிரத வண்டி

ஆ) கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு

06. கருணாகரத் தொண்டமான், குலோத்துங்க சோழனுக்காக கலிங்கம் சென்று போர் செய்து வெற்றிவாகை சூடியவன்.

07. குழந்தை ரோஹினி, மணிக்கொடி பத்திரிகை

08. அ) அறிவுத் திறமையை எவராலும் மறைக்க முடியாது என்னும் கருத்தாகும்.

ஆ) நீரை மறைக்கும் பாசிபோல என்ற உவ மை.

09. ஒப்பிலா மணிப்புலவர், தலைவி வளர்த்த சேவல் கடவாதிருத்தல், தலைவனுடைய தேரும் சூரியனும் பாதாளத்துள் வீழ்ந்து விட்டதோ என்றவாறு கூறல்.

10. மங்கையர்க்கரசியால், காளி தேவியின் முன் தனக்குத்தானே பேசிக் கொள்ளும்போது

சிங்கம் - கருணாகரன்

வினாத் தொகுப்பு விடைகள் முற்றும்.

பணிவுடன் இருங்கள்

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு கனமான மரக் கட்டையை நகர்த்த முற்பட்டு தோல்வியடைந்து கொண்டிருந்த சில படைவீரர்களைக் குதிரையில் வந்த ஒருவர் பார்த்தார். அந்தப் படைவீரர்கள் போராடிக் கொண்டிருந்தபோது, பக்கத்தில் அவர்களது தலைவன் நின்று பார்த்துக் கொண்டி ருந்தான். குதிரையில் வந்த அந்த மனிதர் அவர் களின் தலைவனிடம் "நீ ஏன் உதவி செய்யவில்லை?" என்று கேட்டார். அதற்கு அந்தத் தலைவன், "நான் தலைவன்; நான் ஆணையிடுவேன், அவ்வளவுதான்." என்று பதிலளித்தான். அந்த மனிதர் குதிரையிலி ருந்து இறங்கி வந்து படைவீரர்களிடம் சென்று அவர்கள் அந்தக் கட்டையைத் தூக்கும்போது அவர்களுக்கு உதவினார். அவரது உதவியால் அந்த மரக் கட்டை நகர்ந்தது. அந்த மனிதர் அமைதி யாகத் தனது குதிரையில் ஏறிக்கொண்டு தலைவ னிடம் சென்று, "அடுத்த முறை உங்களது ஆட்க ளுக்கு உதவி தேவையென்றால், படைத் தளபதிக் குச் சொல்லி அனுப்புங்கள்" என்று சொன்னார். அவர் போனவுடன் அந்தக் குதிரையில் வந்தவர் ஜோர்ஜ் வோஷிங்டன் என்று படைத் தலைவனும் அவனது போர் வீரர்களும் அறிந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகம்

பொது அறிவு GK for All 2013

அறிவிற்கான திறவுகோல்

ஆசிரியர் : திரு P. உமாசங்கர் B.Com (Jaf), M.Com (Kelaniya) PGDE (NIE) Spl. Trd.Com N.D.B.F

விலை : 500/=

தொடர்புகளுக்கு : 0718130390

"என்றுமே மாணவர் சார்பாக சிந்தித்து அவர் களின் உயர்வுக்காக பொருத்தமான நூல்களை உரிய காலத்தில் வெளிவரச் செய்து கல்வி உலகில் மகத்தான தொண்டாற்றும் திரு. P. உமா சங்கர் அவர்களின் பொது அறிவு GK for All 2013 எனும் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்" என இந் நூலின் அணிந்துரையில் திரு. வீ. மகாலிங்கம் குறிப்பிடுகின்றார்.

தகவல் தொழிநுட்ப உலகம் இது. இன்று தக வல்கள் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படு கின்றன. திட்டமிடலுக்கும் தீர்மானம் மேற்கொள் வதற்கும் அபிவிருத்திக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் தொடர்பாடலுக்கும் என தகவல்களின் பயன் பாடு நீண்ட பட்டியல். பொது அறிவை வளர்ப் பதில் தகவல்கள் சிறப்பாக பங்களிக்கின்றன. பயன்பாடற்ற வகையில் தகவல்களை மூளையி லோ கொப்பியிலோ நிறைத்து வைப்பதில் பய னில்லை. அவை தேவைக்கேற்றாற்போல் பயன்ப டுத்தப்பட வேண்டும். தகவல்கள் ஒருவருடைய அறிவுத் திறனை அளவிடும் அளவுகோலாகவும் கொள்ளப்படுகிறது.

பொது அறிவுத் தகவல்களின் நோக்கம் அறிந்து அவற்றுக்காக அவை பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் அயராத முயற்சியின் பயனாக மாணவர்களுக்கு GK for All 2013 எனும் நூலை திரு. P. உமாசங்கர் அவர்கள் சமர்ப்பித்துள்ளார்.

பொது அறிவுத் தகவல்களைத் தொகுத்து, இலகு படுத்தி, கோவைப்படுத்தி விபரங்களுடனும் மேலதிக தகவல்களுடனும் தொகுத்திருப்பது அவருக்கே உரிய திறமை. அகரம் இதழில் தொடர்ந்தும் World Today எனும் பகுதியில் பொது அறிவுத் தகவல்களை மாணவர்களுடன் பகிர்ந்து வருகின்றார்.

"2000ம் ஆண்டிலிருந்து இப் பாடத்துறையில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு தற்கால போட்டிப் பரீட்சை மாற்றங்களுக்கேற்ப ஒவ் வொரு துறை ரீதியாக பல்லாயிரம் தகவல்களை உங்கள் முன் சமர்ப்பித்திருக்கிறேன். தமிழ் மொழி யில் நூல்கள் அரிது. அதுவும் இத்துறையில் மிக அரிது. ஆனாலும் வெளிவரும் எந்த ஒரு நூல் கூட முழுமையான விடயங்களைத் தருவனவாக இல்லை. இது வாசகர் ஆதங்கம்."

இவ்வாறு தனது முன்னுரையில் குறிப்பிடும் திரு. P. உமாசங்கர் அந்த ஆதங்கத்திற்கு ஆறுதலாக தன்னாலான பங்களிப்பை நல்கியுள்ளார். எம்மில் பலர் பேசுவதோடு நிறுத்திவிடுவர்; செயற்படுப வர்கள் குறைவு. ஆனால், அமைதியான முறையில் செயலாற்றும் இந்நூலாசிரியரின் பணிகள் கற்கின்ற அனைவருக்கும் காலத்தின் தேவையாக உள்ளது என்பதை மறுக்க முடியாது.

கற்கின்ற மாணவர்கள் பொது அறிவை வளர்த் துக் கொள்வதற்கும் புதிய பொது அறிவுத் தகவல் களைத் தெரிந்து கொள்வதற்கும் குறிப்பிட்ட விடயம் தொடர்பான பொது அறிவுத் தகவல் களை முழுமையாகத் தெரிந்து கொள்வதற்கும் இந்நூல் பயனளிக்கும் எனக் கருதுகின்றேன். தனது தேடலில் கிடைத்தவற்றை தன்னோடு மாத்திரம் சுருக்கிக் கொள்ளாது மற்றவர்களுக்கும் பயனளிக்க வேண்டும் என்ற நோக்கோடு சிரமத்திற்கு மத்தியில் நூலாகக் கொண்டு வந்த திரு. P. உமாசங்கர் அவர்களின் பணி தொடர வாழ்த்துக்கள்.

— ஜே.எம். அஸீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம்

10, 11ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: எம்.ஐ. அப்துல் ரஹீம். மாவனல்லை

பகுதி A

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

01. 4 லீற்றர் பெற்றோலின் விலை ரூ. 480 எனின் 1 லீற்றர் பெற்றோலின் விலை யாது?

02. சுருக்குக. $2^3 \times 10$

03. உருவில் x இன் பெறுமானம் யாது?

04. சுருக்குக. $2x - 5 + 7x$



05. ரூ 400 பெறுமதியான பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்யும்போது ரூ. 80 கழிவு வழங்கப்பட்டால் ரூ. 100க்கு கொள்வனவு செய்யும்போது எவ்வளவு தொகை கழிவாக வழங்கப்படும்?

06. செவ்வகம் ஒன்றின் சுற்றளவு $40\,cm$ ஆகவும் நீளம் $13\,cm$ ஆகவும் இருப்பின் அதன் அகலத்தைக் காண்க.

07. காரணி காண்க. $8 + 2x$

08. 145^0 இன் மிகை நிரப்பு கோணம் யாது?

09. $7^x = 1$ எனின், x இன் பெறுமானத்தைக் காண்க.

10. $A = [5,10,15,20]$ எனின் பொருத்தமான குறியீட்டினை பயன்படுத்தி இடைவெளி நிரப்புக.

15 .... A

11. தீர்க்க $\dfrac{a}{3} = 4$

12. தாங்கி ஒன்றின் $\frac{1}{2}$ பகுதி நிரப்புவதற்கு ஒரு குளாயின் மூலம் 6 நிமிடங்கள் நீர் செலுத்தப்பட்டால் முற்றாக நிரம்ப எவ்வளவு நிமிடங்கள் தேவைப்படும்?

13. தரவுகளைப் பயன்படுத்தி



i. y இனை x இன் சார்பில் தருக.

ii. x இன் பெறுமானத்தைக் காண்க.

14. சுருக்குக. $\dfrac{3x-12}{3}$

15. $1cm \rightarrow 5m$ என்ற அளவிடைக்கு வரையப்பட்ட அளவிடைப் படம் ஒன்றில் $35m$ ஆனது எத்தனை cm இனால் காட்டப்படும்?

16. $y = -2x + 3$ என்ற நேர்கோட்டின் படித்திறன், வெட்டுத்துண்டு என்பவற்றைக் காண்க.

17. $47_{\text{பத்து}}$ என்பதை துவித எண்ணாக மாற்றுக.

18. ஒருவர் காலாண்டு வரியாக ரூ. 420யை உள்ளூராட்சி மன்றத்திற்கு செலுத்தினார். அவர் செலுத்த வேண்டிய ஆண்டு வரியைக் காண்க.

19. உருவில் $AD = BD$ ΔADC இன் பரப்பளவு $60cm^2$ எனின் ΔABC இன் பரப்பிற்கும் ΔBDC இன் பரப்பளவிற்கிடையிலான விகிதம் யாது?



20. $A = \pi r(r + h)$ என்பதில் h யை எழுவாயாக மாற்றுக.

21. சுருக்குக. $2^{-1} + 3^{-1}$

22. $Sin\theta = \dfrac{\sqrt{3}}{2}$ $Cos\theta = \dfrac{1}{2}$ எனின் $\tan\theta$ இன் பெறுமானத்தைக் காண்க.

23. 47,41, 35, ... என்ற எண் தொடரின்

i. பொது வித்தியாசத்தைக் காண்க.

ii. 10ம் உறுப்பைக் காண்க.

24. வட்டத்தின் AOB விட்டமாகும். $C\hat{D}B = 27^0$ எனின் x, y இன் பெறுமானங்களைக் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

25. $(x-y)^2 = 16,\ \ xy = 21$ எனின் $x^2 + y^2$ இன் பெறுமானத்தைக் காண்க.

26. A இனால் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளை விபரிக்க.

27. $\lg 75 + 2\lg 2 - \lg 3$ இன் பெறுமானத்தைக் காண்க.

28. உருவில் Oவை மையமாகக் கொண்ட வட்டத்தின் ஆரை $3a$ ஆகும் எனின் நிழற்றிய ஆரைச் சிறையின் பரப்பு $3\pi a^2$ எனக் காட்டுக.



29. $3^x + 5^x = 34$ எனின் x இன் பெறுமானத்தைக் காண்க.

30. A, B எனும் இரு நிலைத்த புள்ளிகளிலிருந்து X எனும் புள்ளியானது $AB^2 = AX^2 + XB^2$ ஆகுமாறு X ஆனது அசையுமாயின் X இன் ஒழுங்கினை பருமட்டான படம் மூலம் வரைந்து காட்டுக.

பகுதி B

01. i. சுருக்குக. $2\frac{4}{15} - 2\frac{2}{5} \div 1\frac{1}{3}$

(4 புள்ளிகள்)

ii. சுருக்குக. $\frac{2-0.137}{0.3}$ (3 புள்ளிகள்)

iii. ஒருவர் தன்னிடமுள்ள காணியின் 1/5 பங்கினை விற்ற பின்னர் எஞ்சியதில் 3/8 பகுதியை தனது மகனுக்கு கொடுத்தார் எனின்,

a) மகனுக்கு கொடுத்தது முழுவதன் என்ன பின்னம்? (2 புள்ளிகள்)

b) மகனுக்கு கொடுத்து 15 பேர்ச்சஸ் எனின், ஆரம்பத்தில் இருந்த காணி எவ்வளவு? (1 புள்ளி)

02. ஒருவர் ரூ 8000 விலை குறிக்கப்பட்ட உணவு சமைக்கும் இயந்திரம் (Rise Cooker) ஒன்றினை ரூ 2000 முற்பணமாகச் செலுத்தி மிகுதியை ரூ. 545 வீதம் சமதவணைக் கட்டமாகச் செலுத்தும் விதத்தில் பெற்றார்.

i. அவர் செலுத்த வேண்டிய கடன் தொகை யாது? (2 புள்ளிகள்)

ii அவர் 12 சம தவணைக் கட்டணமாகச் செலுத்தி இருந்தால் செலுத்தப்பட்ட மொத்த வட்டி யாது? (2 புள்ளிகள்)

iii. அறவிடப்பட்ட வருட வட்டி வீதத்தைக் காண்க. (3 புள்ளிகள்)

iv. கடன் தொகை ரூ $20x$ எனின் அறவிடப்பட்ட வருட வட்டித் தொகையை x இல் தருக. (2 புள்ளிகள்)

03. $120m$ நீளமும் $60m$ அகலமும் கொண்ட மைதானம் ஒன்றின் மத்தியில் தரப்பட்ட அளவுகளைக் கொண்ட ஓடுபாதை (Track) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.



i. மைதானத்தின் பரப்பு யாது? (2 புள்ளிகள்)

ii. பக்கம் AB, BC யிலிருந்து ஓடுபாதைக் குரிய கிட்டிய தூரத்தை வரிப்படத்தில் குறித்துக் காட்டுக. (2 புள்ளிகள்)

iii. ஒரு பாதையின் சுற்றளவினை m இல் தருக. (3 புள்ளிகள்)

iv. இதன் உட்பகுதியில் (நிழற்றப்பட்ட பகுதி) புற்கள் நடப்பட வேண்டுமாயின் அப்பகுதியின் பரப்பளவு யாது? (வட்டத்தின் சுற்றளவு πr^2) (3 புள்ளிகள்)

04. ஆண் பெண் மாணவர்கள் 46 பேரைக் கொண்ட வகுப்பில் அனைவரும் கணித அல்லது விஞ்ஞான கழகத்தில் அங்கத்தவர்களாக காணப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



* ஒருவர் ஒரு கழகத்தில் மாத்திரமே அங்கத்தவராக முடியும்.
* தரப்பட்ட வென்னுருவைப் பயன்படுத்தி விடை தருக.

a) i. நிழற்றப்பட்ட பகுதியை விபரிக்க. (2 புள்ளிகள்)

ii. கணித கழகத்திலுள்ளவர்கள் 28பேர் எனின், அதிலுள்ள மாணவிகளின் எண்ணிக்கை யாது? (2 புள்ளிகள்)

iii. விஞ்ஞான கழகத்திலுள்ள மாணவிகள் 12 பேர் எனின், அதிலுள்ள ஆண் மாணவர்கள் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

b) i. மேலுள்ள தரவுகளை அட்டவணையில் குறித்துக் காட்டுக. (3 புள்ளிகள்)

கழகம்	Boys	Boys
கணிதக் கழகம்	20	....
விஞ்ஞானக் கழகம்	....	....

ii. ஒருவர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டால் அவர் விஞ்ஞான கழகத்திலுள்ள ஆணாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது? (1 புள்ளி)

05. கணிப்பீடு ஒன்றில் தரம் 10 மாணவர்கள் தமிழ் மொழிப் பாடத்தில் பெற்ற புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன.

23	46	27	36	14
10	07	29	41	40
36	28	27	44	47
09	13	19	24	28
11	20	27	32	34

a) i. மீடிறன் அட்டவணையை பூர்த்தி செய்க. (2 புள்ளிகள்)

வகுப்பாயிடை	மீடிறன்
0 - 10	....
10 - 20	....
20 - 30	....
30 - 40	....
40 - 50	....

ii. ஆகார வகுப்பு யாது? (1 புள்ளி)

iii. 30 அல்லது அதனிலும் கூடுதலாக புள்ளிகளை பெற்றோர் முழுவதன் என்ன பின்னம் (2 புள்ளிகள்)

b) i. இதற்கான வலையுரு வரையத்தை வரைக. (3 புள்ளிகள்)



ii. அதிகூடிய 20% மான மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதாயின் அவர் குறைந்தது எத்தனை புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும்? (2 புள்ளிகள்)

தொடரும்...

புதிது புதிதாக... (24ஆம் பக்கத் தொடர்...)

உங்கள் இலட்சியத்தை அடைவதற்கு அது தேவை என்றால் நீங்கள் அதற்காக எதை இழப்பதைப் பற்றியும் கவலைப்படாது அதனைத் தீர்மானியுங்கள்.

மற்றவர்களைப் பார்த்து மற்றவர்கள் என்ன சொல்வார்கள் என்று பயந்து மற்றவர்களுக்காக முடிவு எடுக்காதீர்கள். அது உங்கள் வாழ்க்கையையே தொலைத்து விடுவதாக அமையும்.

துணிச்சலாக முடிவு எடுக்கும்போது அது உங்களுக்கு ஆர்வம் மிக்கதாகவும் சவால் நிறைந்ததாகவும் இருக்குமாறும் பார்த்துக் கொள்ளுங்கள். நம்பிக்கையோடு செயல்படுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 தர மாணவர்களுக்கு

விஞ்ஞானம்



தரம் 10 இரசாயனவியல் ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

சடப்பொருளின் கட்டமைப்பும் அளவும்

- சடப்பொருட்களை மூலகங்கள், சேர்வைகள் என வகைப்படுத்தலாம்.
- சடப்பொருட்களின் ஆக்கக் கூற்று அலகு அணு ஆகும். இது புரோத்தன், நியூத்திரன், இலத்திரன் எனும் 3 துணிக்கைகளால் ஆனது.

உப அணுத் துணிக்கைகள்

விடயம்	$^{1}_{1}P$	$^{1}_{0}h$	$^{0}_{-1}e$
பெயர்	புரோத்தன்	நியூத்திரன்	இலத்திரன்
ஏற்றம்	+1	0	−1
திணிவு	1அலகு	1அலகு	அலகு
கண்டுபிடிப்பு	இரதபோட்	ஜேம்ஸ் சட்விக்	J.J. தொம்சன்

அணுக்களின் கட்டமைப்பு பற்றிய கருத்துக்கள்

1. பிளம்புடிங் மாதிரியுரு (J.J. தொம்சன்)

   அணுவானது நேரேற்றமுடைய கோளம் ஒன்றினுள் மறையேற்றமுடைய இலத்திரன்கள் பதிந்துள்ள அமைப்பாகும்.

2. கோளக மாதிரியுரு (இரதபோர்ட், நீல்போர்)

   அணுவிற்கு நேரேற்றத்தையும் திணிவையும் கொடுக்கும் துணிக்கைகள் அணுவின் மிகச் சிறிய பகுதியில் செறிவடைந்துள்ளன. இப்பகுதி கரு ஆகும்.

   இலத்திரன்கள் கருவிற்கு வெளியே கோள்கள் சூரியனைச் சுற்றிப் பயணிப்பதுபோல் வட்ட ஒழுக்குகளில் பயணிக்கின்றன.

01. தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அணுவின் மாதிரியுரு பற்றிய இரண்டு விடயங்களை எழுதுக.

02. அணுவொன்றின் கருவில் நேர்த்துணிக்கைகள் 15 உள்ளன. இதிலுள்ள நடுநிலைத் துணிக்கைகள் 16 ஆயின்;

    i. இதிலுள்ள இலத்திரன்கள் எத்தனை?

    ii. இது கொண்டுள்ள நியூக்கிளியோன்கள் எத்தனை?

    iii. இவ்வணுவின் இலத்திரன் நிலையமைப்பை எழுதி, இலத்திரன் கட்டமைப்பை வரைந்து காட்டுக.

03. ஐதரசனின் சமதானிகள் $^{1}_{1}H$, $^{2}_{1}H$, $^{3}_{1}H$ ஆகும். இவற்றிற்கிடையே வேறுபடும் இரண்டு இயல்புகளைக் குறிப்பிடுக.

04. சமதானிகள் என்பதன் கருத்தை விளக்குக.

மூலகங்களின் சாரணுத்திணிவு

- அணுவின் திணிவைக் குறிப்பிடப் பயன்படுத்தும் அலகு அணுத் திணிவு அலகு ஆகும்.
- தற்போது ஏற்றுக்கொள்ளப்படும் அணுத் திணிவு அலகு = $^{12}_{6}C$ அணுவொன்றின் திணிவின் $\frac{1}{12}$ பங்கு ஆகும்.

  சாரணுத்திணிவு: மூலகம் ஒன்றின் ஓர் அணுவின் திணிவானது ஏற்றுக்கொள்ளப்படும் அணுத் திணிவு அலகு சார்பாக எத்தனை மடங்கு என்பது சாரணுத்திணிவு ஆகும்.

இரசாயனப் பிணைப்புகள்

- அணுக்கள் இயற்கையில் நடுநிலையானவை. எனினும் உறுதியற்ற நிலையிலுள்ள அணுக்கள் இலத்திரன்களை இழந்து அல்லது ஏற்று உறுதி நிலையை அடைந்து கொள்ளும்போது அயன்களாக மாறும்.
- இலத்திரன்களை இழந்து உருவாகும் நேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்களுக்கும் அவ்விலத்திரன்களை ஏற்று உருவாகும் மறை அயன்களுக்குமிடையே ஏற்படும் நிலைமின் கவர்ச்சி அயன்பிணைப்பு எனப்படும்.

- மூலக அணுக்களுக்கிடையே இலத்திரன்கள் பங்கிடப்படுவதனால் உருவாகும் பிணைப்பு பங்கீட்டு வலுப்பிணைப்பு ஆகும்.

05. அயன் பிணைப்பு (மின்வலுப் பிணைப்பு) மூலம் உருவாகும் சேர்வைகள் கொண்டுள்ள மூன்று இயல்புகளை எழுதுக.

06. நீர் மூலக்கூறில் காணப்படும் பிணைப்பு வகையை எழுதி அதன் பிணைப்பை குற்று, புள்ளடி முறையில் குறித்துக் காட்டுக.

07. அணுக்கள், மூலக்கூறுகள், அயன்கள் முப்பரிமாண ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப்படுவதால் சாலகங்கள் உருவாகின்றன. அயன் சாலகம், பங்கீட்டுச் சாலகம் என்பவற்றுக்கு உதார ணங்களை எழுதுக.

மூல் (Mole)

- இரசாயனவியலில் பதார்த்தங்களை அளவிடும் நியம அலகு மூல் ஆகும்.
- 12g $^{12}_{6}C$ சமதானியிலுள்ள அணுக்களின் எண்ணிக்கை 6.022×10^{23} ஆகும். இதுவே அவகாதரோ எண் அல்லது அவகாதரோ மாறிலி எனப்படும். இவ்வெண்ணிக்கை அளவுடைய பதார்த்தத் துணிக்கைகள் 1மூல் எனப் படும்.
- மூலகங்களுக்கு அவற்றின் சாரணுத்திணிவின் கிராம் பெறுமானம் 1மூல் ஆகும். (அணு மூல்)

  eg : Mg இற்கு: 24g = 1 மூல்,

  O இற்கு: 16g = 1மூல்
- சேர்வை/ மூலக் கூறுகளுக்கு அவற்றின் சார் மூலக்கூற்றுத்திணிவின் கிராம் அளவு 1மூல் (மூலக்கூற்று மூல்) ஆகும்.

  eg: S02 இற்கு: 64g = 1மூல்,

  O2 இற்கு: 32g = 1மூல்
- எல்லா பதார்த்தங்களினதும் 1மூலில் உள்ள அணுக்கள்/ அயன்கள்/ மூலக்கூறுகள் ஒரே அளவாகும். இது அவகாதரோ மாறிலி பெறுமானமாகும். (6.022×10^{23})

மூலர்த்திணிவு

- பதார்த்தங்களின் 1மூல் அளவுடைய திணிவு மூலர்த்திணிவு ஆகும். இதன் நியம அலகு $Kg\,mol^{-1}$ ஆகும்.

  பயன்பாட்டின்போது இது $g\,mol^{-1}$ எனும் அலகிலும் குறிப்பிடப்படும்.

  eg: Naஇன் மூலர்த்திணிவு = 23 $g\,mol^{-1}$

  H2Oஇன் மூலர்த்திணிவு = 18 $g\,mol^{-1}$

08. மூலகங்கள், சேர்வைகளின் சார் மூலக்கூற்றுத் திணிவைக் காண்பதற்கான சமன்பாட்டை எழுதுக.

09. சலவைச் சோடாவின் சூத்திரம் Na2Co3 ஆகும். இதன் சார் மூலக்கூற்றுத் திணிவைக் காண்க. (Na = 23, C= 12, O= 16)

10. பின்வரும் சேர்வைகளின் சூத்திரங்களை எழுதுக.

    a. அலுமினியம் குரோரைட்டு
    b. கல்சியம் ஒட்சைட்டு
    c. நைத்திரிக்கமிலம்
    d. எரிசோடா

விடைகள்

01. ➢ அணுவின் கருவானது நேரேற்றமுடைய புரோத்தன்களாலும் நடுநிலையான நியூத்தி ரன்களினாலும் ஆனது.

    ➢ இலத்திரன்கள் கருவைச் சுற்றி குறித்த தூரங்களிலுள்ள முப்பரிமாண சக்தி மட்டங்களில் சுற்றி வருகின்றன.

02. i. 15 ii. 31

    iii. இலத்திரன் நிலையமைப்பு = 2, 8, 5

    iv.

03. i. புரோத்தன்களின் எண்ணிக்கை

    ii. திணிவெண்

04. ஒரே அணுவெண்ணையும் வேறுபட்ட திணிவெண்களையும் கொண்ட ஒரே மூலகத்தின் அணுக்கள் சமதானிகள் எனப்படும்.

05. i. அறை வெப்பநிலையில் திண்மமாகக் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. உயர் உருகுநிலை கொண்டவை, உயர் கொதிநிலை கொண்டவை.

iii. உருகிய திரவம், கரைசல்கள் மின்னைக் கடத்தும்.

06. பங்கீட்டு வலுப்பிணைப்பு



07. *அயன் சாலகம்:* சோடியம் குளோரைட்டு, கல்சியம் ஒட்சைட்டு

பங்கீட்டுச்சாலகம்: காபன், வைரம், சிலிக்கா

08. சா. மூ.தி = $\dfrac{\text{மூலக்கூறு ஒன்றின் திணிவு}}{^{12}_{6}C \text{ அணுவொன்றின் } \frac{1}{2} \text{ பங்கு திணிவு}}$

09. Na_2W_3 இன் சார்மூலக் கூற்றுத் திணிவு

$= 23 \times 2 + 12 + 16 \times 3$

$= 46 + 12 + 48$

$= 106$

10. (a) $AlCl_3$ (b) CaO

(C) HNO_3 (d) NaOH

தரம் 11 சில் மூலகங்கள் சேர்வைகளின் இயல்புகளும் பிரயோகங்களும்.

❧ மூலகங்களை உலோகங்கள், அல்லுலோகங்கள், உலோகப் போலிகள், விழுமிய வாயுக்கள் என 4 வகைப்படுத்தலாம்.

01. பின்வரும் இயல்புகளையுடைய உலோகங்களை எழுதுக.

a. திரவ நிலையில் காணப்படுபவை.

b. மென்மையானது, நீரிலும் அடர்த்தி குறைந்தது.

c. அமில எதிரி மருந்து தயாரிக்கப் பயன்படுவது.

02. மக்னீசியம் வளியுடனும் நீராவியுடனும், ஐதான ஐதரோக் குளோரிக்கமிலத்துடனும் காட்டும் தாக்கங்களுக்கான சமப்படுத்திய சமன்பாடுகளை எழுதுக.

i. $Mg + O_2$:- ....

ii. $Mg + H_2O_{(g)}$:- ....

iii. Mg = HCl :- ....

♦ அல்லுலோகங்கள் உலோகங்களுக்கு நேர்மறையான பௌதிக, இரசாயன இயல்புகளைக் கொண்டிருக்கும் ஒரு சில விதிவிலக்காக உலோகப் பண்புகளைக் காட்டும்.

Eg:- அயடீன் - பளபளப்பாயிருத்தல் காரீயம் (காபன்) மின்னைக்கடத்தல்.

03. பல்வேறு அல்லுலேகங்கள் பௌதிக அமைப்பில் வேறுபட்ட பளிங்குருவற்ற வடிவங்களில் காணப்படும். இவ்வடிவங்கள் எவ்வாறு அழைக்கப்படும்.

04. பின்வரும் பயன்பாட்டிற்காக உபயோகிப்படும் அல்லுலோகத்தின் பெயரைக் குறிப்பிடுக.

a) சல்பூரிக்கமிலத் தயாரிப்பு, இறப்பர் வல்கனைசுப்படுத்தல்

b) மின்வாய்கள், பென்சில் உற்பத்தி, உராய்வு நீக்கி

c) வெளிற்றும் தூள் தயாரிப்பு, நீரைச் சுத்திகரித்தால்

05. உலோகப் போலிகளாகக் காணப்படும் இரு மூலகங்களை எழுதி அவற்றின் பயன்கள் இரண்டு வீதம் எழுதுக.

விழுமிய வாயுக்கள்

➢ இவை ஆவர்த்தன அட்டவணையில் viii ம் கூட்டத்தில் உள்ளவை.

➢ இறுதி இலத்திரன் சக்தி மட்டம் அட்டக அமைப்புடையது.

➢ யாவும் ஓர் அணுக்கொண்டவை.

eg:- ஈலியம், நியோன், ஆகன்

♦ அமிலங்கள், மூலகங்கள், உப்புகள் என்பன சேர்வைகளின் வகைகளாகும்.

அமிலங்கள்

➢ நீரில் கரையும் போது H^+ அயன்களை உருவாக்கும்.

➢ புளிப்புச் சுவையுடையவை

➢ PH=7 ஐ விடக் குறைவானவை

➢ நீலப்பாசிச்சாயத்தாளை சிவப்பு நிறமாக மாற்றும்

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மழை பொழிகிறது – மாரி
மழை பொழிகிறது

விண்ணை விட்டு
விரைந்து வந்து
மண்ணின் மீது
மணி மணியாய்
மழை பொழிகிறது – மாரி
மழை பொழிகிறது

தென்னை மரம்
தெளித்த பன்னீர்
திண்ணையிலே
தெறிக்கும் முத்தாக
மழை பொழிகிறது – மாரி
மழை பொழிகிறது

காய்ந்திருந்த
களித்தரையில்
பாய்ந்து வெள்ளம்
பொங்கி ஓட
மழை பொழிகிறது – மாரி
மழை பொழிகிறது

இடி முழக்கம்
இல்லாமலே
குடிசைக்குள்ளே
நுழையாமலே
மழை பொழிகிறது – மாரி
மழை பொழிகின்றது

ஏ.டப்ளியூ.எம். ஹூமைஸ், தரம் 11
அக்/ பொத்துவில் ம.க.
பொத்துவில்

சிட்டுகளே!

காலை உதித்த வண்ணமாய்
வெண் கொக்குகளாய்
நீர் காலைப் பொழுதில் தவழ்ந்திட

பள்ளியறை வாயிலில்
மலர்களாய் மலர்ந்திட
சின்னச் சிட்டுகளாக
வகுப்பறையில் சிறகடித்துப் பறந்திட

ஆசானின் அறிவுரை கேட்டு
அன்பின் வடிவமாய்த் திகழ்ந்திட
ஈமானைப் பின்பற்றி
ஈருலகம் போற்றிட

பெற்றோரை மதித்து
அறிவை வளர்த்திட
அவ்ரத்தைக் கற்று
ஆடையைப் பேணிட

அன்பைத் தேடும் சிட்டுக்களாய்
அல்லாஹ்வின் அருளைத் தேடி
அவன் விரும்பும் குழந்தைகளாக இறந்திட
அருள் புரிவாய் அல்லாஹ்வே!

எம்.எல். சீனத்துல் பாஹிமா
தரம் 8
தி/ அல்தாரிக் ம.வி, கந்தளாய்

உண்மை வாழ்விற்காய்...



உணர்விருந்தும் உயிரில்லாமல்
கண்ணீரிருந்தும் கண்களில்லாமல்
பேச்சிருந்தும் நாவில்லாமல்
ஜடமாய் வாழும்
நாணமற்ற வாழ்க்கையிது

வாழ்க்கையெனும் புத்தகத்தில்
பக்கங்கள் மட்டும் புரட்டப்படுவதில்லை
மனிதர்களும் தான் புரட்டப்படுகின்றனர்

பொய்யான நேசம்
பொய்யான பாசம் இத்தனையும்
போலியாக எதற்காக? வெறும்
உலகத்திற்காகத் தான்

உண்மை அன்பைத் தேடி
உழல்கிறது கபடமில்லா உள்ளம்
இறுதியில்...
எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றங்களும்
வாழ்க்கையாகின்றன.

ஆனால்,
அனாதரவற்ற பொய்யுலகிற்கு
வாழ்வதை விட
உண்மை உலகிற்கான பயணத்தை
இன்றே ஆரம்பிப்போம்
இன்ஷா அல்லாஹ்

ஸப்னா பானு பின்த் முஹம்மது அலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 45 நிமிடம்
வினாப்பத்திரம் I

ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

கீழ்வரும் மூன்று படங்களுக்கும் மிகவும் பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.

01.


i. உணவு ii கீரை வகை
iii. மரக்கறி

02.


i. தாவர உண்ணி ii. பிராணிகள்
iii. மிருகங்கள்

03. முதலில் தரப்பட்டுள்ள உருவிற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



04. இவ்வுருவிற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

i. பாம்பு
ii. எறும்பு
iii. கறையான்

05. தரப்பட்டுள்ள உருக்களுக்கு பெறுமதி தரப் பட்டுள்ளது. அதன் கூட்டுத்தொகை குறுக்காகவும் மேலிருந்து கீழாகவும் தரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வரவேண்டிய இரு உருக்களையும் தெரிவு செய்க.

○	△	□	15
○	○	□	17
?	?	□	17
18	16	15	

i. ○ △
ii. ○ ○
iii. ○ □

கீழுள்ள கோலத்தில் அடுத்து வர வேண்டிய எண்ணைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

06. 25, 30, 40, 55, 75

i. 95 ii. 100 iii. 105

07. 1, 1, 2, 3, 5, 8

i. 12 ii. 13 iii. 15

08. 1, 2, 4, 8, 16, 32

i. 62 ii. 72 iii. 64

09. அதிகளவு நீர்த்தன்மை கொண்டுள்ள பழங்களில் ஒன்று.

i. வாழைப்பழம் ii. அப்பிள்
iii. வத்தகைப்பழம்

10. காயாகவும் பழமாகவும் உணவுக்குப் பயன் படுத்தப்படும் தாவரப் பகுதி.

i. ஈரப்பலா ii. வாழைக்காய்
iii. கத்தரிக்காய்

11. பின்வரும் வித்துக்களில் கறுப்பு நிறத்தைக் கொண்ட வித்து எது?

i. பப்பாசி, பயறு ii. மிளகு, பப்பாசி
iii. மிளகு, புளி

12. சீனி பெற உதவும் தாவரங்கள்.

i. பீட்றூட், போஞ்சி
ii. கரும்பு, பீட்றூட்
iii. மிளகு, புளி

13. பிடித்த மீன்களை வைக்கும் கூடை.

i. பறி ii. கரப்பு
iii. அத்தாங்கு

14. கிறவல் பாதைகளை கொத்திக் கிளறுவதற்குப் பயன்படுத்தும் கருவி.

i. மண்வெட்டி ii. பிக்கான்
iii. சவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் பந்தியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

குருவிக்குளம் அரசினர் பாடசாலையின் 25வது வருடாந்த பூர்த்தி விழாவை முன்னிட்டு கலைவிழா, பரிசளிப்பு விழா என பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அன்றைய தினம் பாடசாலைக்கு புதிய அதிபர் ஒருவர் பாடசாலையை பொறுப்பேற்பது என்ற விஷேட செய்தி ஒன்றும் பரவிக்கொண்டிருந்தது. மாணவர்களும் ஆசிரியர்களும் உற்சாகமாக விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். தற்காலிக அதிபர் அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தார். மாலையானதும் பிரமுகர்கள் வருகை தந்தனர். புதிய அதிபராக பதவி ஏற்ற அப்புதிய அதிபரும் பிரதம அதிதிகளோடு வருகை தந்தார். அந்த பிரமாண்டமான மேடையிலே புதிய அதிபரும் அவருடைய முதல் பேச்சைப் பேசினார். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எல்லோரும் கைதட்டி அவரைப் பாராட்டினர்.

15. 25வது நிறைவாண்டை கொண்டாடியது எது?

16. 25வது நிறைவாண்டு கொண்டாடும் விழாவிற்கான பெயர் யாது?

17. அதிபரின் முதல் பேச்சுக்குப் பொருத்தமான தனிச்சொல் யாது?

18. அதிபர் என்பதற்கான ஆங்கிலப் பதத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

19. பொறுப்பேற்று என்பதனைப் பிரித்து எழுதுக.

பந்தியில் இடம்பெற்ற பலர்பால் சொற்களை 2 தருக.

20. ....

21. ....

22. கரகோஷம் என்ற சொல்லுக்கு பந்தியில் இடம் பெற்ற அதே கருத்தைத் தரும் சொல் யாது?

பறவைகளை இனங்கண்டு தரப்பட்ட பெயர்களை எழுதுக.

மைனா, மீன்கொத்தி, தேன்குருவி, ஆந்தை, ஆட்காட்டி, இரட்டை வாள் குருவி, நீர்க்காகம்

23. ....   24. ....



25. ....   26. ....

முதலில் தரப்பட்டுள்ள சொற்களுக்கிடையே காணப்படும் தொடர்புகளுற்கேற்ப மூன்றாவது தொடர்புடைய சொல்லின் கீழ் கோடிடுக.

27. காகம் - பறவை,   பாம்பு : ....
 i. பறப்பன   ii. ஊர்வன
 iii. நடைப்பன

28. ஊசி - நூல்,   துப்பாக்கி : ....
 i. வீரன்   ii. ரவை
 iii. வெடிப்பன சத்தம்

29. புத்தகம் - பக்கம்,   மரம் : ....
 i. வேர்   ii. இலை
 iii. மரக்கட்டை

30. 2 கிலோகிராம் அரிசியில் விலை ரூபா 160 எனின், 350 கிராம் அரிசியின் விலை?

31. 3 மீற்றர் துணியின் விலை ரூபா 360 எனின், 125 சென்றி மீற்றரின் விலை?

32. 150 மில்லி லீற்றர் பாலின் விலை ரூபா 12 எனின், ஒரு லீற்றர் பாலின் விலை?

33. 9 பந்துகளின் விலை ரூபா 81 ஆகும். 5 பந்துகளின் விலை?

கீழ்வரும் பழமொழிகளுள் இரண்டு ஒரே கருத்தை தரக்கூடியன. ஒன்று மட்டும் வேறுபடும் அதன் கீழ் கோடிடுக.

34. i. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்
 ii. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
 iii. முயற்சி திருவினையாக்கும்

35. i. கந்தையானாலும் கசக்கிக் கட்டு
 ii. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
 iii. சுத்தம் சுகம் தரும்

வாக்கியத்தில் இடம்பெற்ற பெயர் அடைமொழிகள்

கொடிய வேடன் புள்ளி மானை துரத்திப் பிடித்தான்.

36. ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

37. ....

மடி மீது இருந்த குழந்தை எதிர்காலத்தில் பார் போற்ற வாழும் என தாய் நினைக்கவில்லை. இவ்வாக்கியத்தில் பெயரும் வினையுமாக வந்த சொல்.

38. .... 39. ....

தந்தை தனது குழந்தைகளை அவரது மாம னார் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். இவ்வாக் கியத்தில் வந்துள்ள ஒருமை உயர்திணை பெயர்ச் சொற்கள்.

40. .... 41. ....

தனி மரபு சொற்களைத் தருக.

42. மா, வாழை, பலா ....

43. இயல், இசை, நாடகம் ....

44. தாய், தந்தை, குரு ....

பின்வரும் சொற்களை பொருத்தமான சொல் லுக்கு விடையாக எழுதுக.

முக்காரமிடும், விட்டை, கலை, குருளை, மூசு, குவியம்

45. பிணை ....

46. கல் ....

47. எருமை ....

48. பலா ....

49. கழுதை ....

50. புலி ....

சரியான விடையின் கீழ் கீறிடுக.

51. 2012ஆம் ஆண்டின் 100வது நாள் எத்தனை யாம் திகதியாக இருக்கும்?

i. ஏப்ரல் 8 ii. ஏப்ரல் 10
iii. ஏப்ரல் 9

52. 2013ஆம் ஆண்டின் 60வது நாள் எத்தனையாம் திகதியாக இருக்கும்?

i. பெப்ரவரி 29 ii. மார்ச் 01
iii. மார்ச் 02

53. வெற்றிடத்திற்கு வரவேண்டிய நிறையை கண்டுபிடித்து சரியான விடையின் கீழ் கீறிடுக.

1220g + 770g + 1560g + ... + 4kg

i. 370g ii. 470g iii. 460g

சரியான விடைக்குக் கோடிடுக.

54. பக்தர்கள் (இரை, இறை) பக்தியோடு தொழுது நின்றனர்.

55. குழந்தையின் நிலை கண்டு தாய் (மணம், மனம்) பதறினாள்.

56. இளைஞன் (காலை, காளை)யை அடக்கினான்.

57. (புலி, புளி) அறுசுவைகளில் ஒன்று.

58. இடை (வேலை, வேளை)யில் மாணவர்கள் விளையாடினர்.

59. வெளிநாட்டில் இருந்து வந்த எனது மூத்த சகோதரன் தந்த வினோதப் பாவை என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் வேண் டும்.

(04ஆம் பக்கத் தொடர்...)

எம் மார்க்கத்தின் விளக்கங்களை தெளிவுபடுத் துவதன் மூலம் அவர்கள் எமது மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இஸ்லாத்தின் பகைவர்களாக மாறாமலிருக்க அது காரண மாக அமைவதோடு இந்நாட்டில் எமது இருப் பையும் சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொள் வதற்கும் அது உதவியாக அமையும்.

இந்த நாட்டில் சிறுபான்மை முஸ்லிம்க ளாக வாழுகின்ற நாம் எமக்கும் எமது மார்க் கத்திற்கும் எதிராக பல கெடுபிடிகள் முன்னெ டுக்கப்படுவதை அவதானிக்கிறோம். இந்நிலை மைக்கான முக்கிய காரணங்களுள் ஒன்றுதான் சுமார் 1300 வருடகால வரலாற்றை இந்நாட்டு மண்ணில் கொண்டுள்ள நாம் இத்தனை வருட மும் நாம் ஏற்றிருக்கின்ற, நாம் விரும்புகின்ற, மேலாகக் கருதுகின்ற இஸ்லாத்தை பிற சகோதரர்களுக்கும் எடுத்துச் சொல்வதில் பொடு போக்காக இருந்துவிட்டமையே. எனவே, எமது எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இப்போதிருந்தே இஸ்லாத்தை பிறருக்கு எடுத்துரைக்கின்ற இப்பணியை முன்னெடுப்ப தற்கு முயற்சிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II

ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

இங்கு வெற்றுக் கூட்டுக்குள் வர வேண்டிய உருவைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

01. 

i. 

ii. 

iii. 

02.

4	5	5	6
7	6	4	7
		6	7
		5	4

i.

7	4
6	5

ii.

4	7
6	5

iii.

7	6
4	5

03.

P	Q	Q	R	R	S		
S	R	P	S	Q	P		

i.

S	R
R	Q

ii.

S	R
Q	P

iii.

R	S
Q	P

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

04. ஆற்றுநீர் கடலை நோக்கிப் பாய்வதற்கான காரணம்.
   i. கடல் மிகப் பரந்ததினாலாகும்
   ii. நதிகள் மிக வேகமாகப் பாய்ந்து செல்வதினால்
   iii. நிலத்தை விட கடல் தாழ்வாக இருப்பதனால்

05. நதிகளின் நீர் மட்டம் நாளுக்கு நாள் குறைந்து செல்கிறது. அதற்குரிய பிரதான காரணமாக இருப்பது.
   i. விவசாயத்திற்கு நதிகளின் நீரைப் பயன் படுத்துவதனால்
   ii. மழை கிடைக்காமை
   iii. நதிகளின் நீர் கடலில் கலப்பதால்

06. மிகச் சரியாக ஒழுங்கு முறைப்படி அமைந்த ஒரு தொகுதி
   i. லீற்றர், மீற்றர், கிராம், கிலோகிராம்
   ii. மில்லி கிராம், கிலோ கிராம், லீற்றர், மில்லி லீற்றர்
   iii. மில்லி மீற்றர், சென்றி மீற்றர், மீற்றர், கிலோ மீற்றர்

07. ஏதோ ஒரு வகையில் பொருத்தமாக அமைந்த ஒரு தொகுதி
   i. மயில், குயில், புறா, காகம்
   ii. ஆடு, பல்லி, மாடு, ஓணான்
   iii. கொக்கு, வாத்து, முயல்

08. வியாபார நடவடிக்கைளின்போது விளம்பரம் செய்யப்படும் ஊடகங்கள் யாவை?
   i. சுவரொட்டி, தொலைக்காட்சி
   ii. வானொலி, வீடு
   iii. வீடு, விளம்பரப் பலகை

மிகச் சரியான சொல் வரிசையின் கீழ் கீறிடுக.

09. i. செக்கன், மணி, நிமிடம், நாள்
   ii. செக்கன், நிமிடம், மணித்தியாலம், நாள்
   iii. செக்கன், நிமிடம், நாள், மணித்தியாலம்

10. i. குழந்தை, பிள்ளை, வயோதிபம், வாலிபம்
   ii. குழந்தை, பிள்ளை, வாலிபம், வயோதிபம்
   iii. குழந்தை, வயோதிபம், வாலிபம், பிள்ளை

பின்வரும் நிறைகளைக் கூட்டினால் வரும் விடை

11. 1050g + 660g + 330g + 420g

   i. 2900g   ii. 246g   iii. 3kg

12. 755ml + 1660ml + 550ml + 35ml

   i. 3000ml   ii. 300ml   iii. 2l

13. 2l + 175ml + 1050ml + 10ml

   i. 3225ml   ii. 3235l   iii. 3235ml

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் சொல்லுக்குப் பொருத்தமற்ற சொல்லின் கீழ்க் கோடிடுக.

14 கதிரவன் (அருக்கன், பரிதி, புரவி)

15. அந்தி (மத்தியானம், மாலை, நாழிகை)

16. கவி (நடனம், காது, செய்யுள்)

1 _வுள் (தே, கிரி, சாலை)

18. வேந்தன் (குதிரை வீரன், மன்னன், அரசன்)

பின்வரும் பந்தியை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

வணக்கம் ஐயா!

வணக்கம்.

ன்ன விஷயமாக வந்தீர்?

எனது மருமகனுக்கு ஆள் அடையாள அட்டை எடுக்க வேண்டும்.

அவருக்கு வயது எத்தனை?

இருபது.

ன் இதுவரை காலமும் எடுக்கவில்லை?

இதுவரை அவர் அக்கறை செலுத்தாது இருந்து விட்டார்.

அது பெரும் தவறல்லவா? சரி அவர் எங்கே?

அவர் யாழ்ப்பாணம் சென்றுள்ளார்

அவர் தாய் தந்தை யார்?

மேரி ஜெசின்டா, இமானுவேல்.

சரி உங்கள் மருமகன் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த பிறகு பிறப்புச் சான்றிதழுடன் வரச் சொல்லுங்கள்.

ன்றி ஐயா, போய் வருகின்றேன்.

19. உரையாடலில் இடம்பெற்ற இருவர்

i. ஊர்வாசி, பொலிஸ் அதிகாரி

ii. கிராம சேவகர், தபால் அதிபர்

ஊர்வாசி, கிராம சேவகர்

20. ஆள் அடையாள அட்டையை வழங்கும் இடம்.

i. மத்திய வங்கி

ii. ஆட்பதிவுத் திணைக்களம்

கிராம சேவகர் பிரிவு

21. அடையாள அட்டை சம்பந்தமாக கதைக்கச் சென்றவர், மேரி ஜெசின்டாவுக்கு என்ன முறையாக இருக்கலாம்?

அண்ணன் ii. கணவன்

iii. தம்பி

22. பின்வரும் எந்த வயதினர் ஆள் அடையாள அட்டையை பெறத் தகுதி உடையவர்?

i. 6 வயது ii. 16 வயது

iii. 16 மாதம்

23. குறிப்பிட்ட நபரின் பெற்றோர் எந்த சமயத்தை சார்ந்தவர்களாக இருக்கலாம்?

i. இஸ்லாம் ii. இந்து

iii. கிறிஸ்தவம்

24. வணக்கம் என்பதற்கு சிங்களத்தில் கூறக் கூடிய பொருத்தமான ஒரு சொல்.

i. பொஹம ஸ்தூத்தி ii. ஆயுபோவன்

iii. ஜெயவேவா

25. பிறப்பிற்கு அத்தாட்சி பிறப்புச் சான்றிதழ், இறப்பிற்கு அத்தாட்சி.

i. மரண சாசனம்

ii. இறப்பத்தாட்சிப் பத்திரம்

iii. பற்றுச்சீட்டு

26. மருமகன் என்பதற்கான எதிர்பாற் கருத்து

i. மருமகள் ii. மணமகள்

iii. மகள்

பின்வரும் தமிழ் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை எழுதுக.

27. வெள்ளிக்கிழமை : ....

28. திங்கட்கிழமை : ....

பின்வரும் விலங்குகளை வைத்து பழமொழிகளை பூரணப்படுத்துக.

கழுதை — பூனை — புலி — ஆனை — நாய்

29. .... பசித்தாலும் புல் தின்னாது.

30. குரைக்கிற .... கடிக்காது.

31. .... அறியுமா கற்பூர வாசனை.

32. சூடு கண்ட .... அடுப்பங்கரையை நாடாது.

33. ....க்கும் அடிசறுக்கும்.

பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்துக.

34. மூா-ளி-வி-வெ-ள் :.................................

35. து-ம்-ட-ரு-வ-வ :.................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. பு-ப்-நா-ம்-க-பா :..............................

37. து-ம்-க-வெ-ப்-ப :..............................

38. ன்-ர-கு-க-க் :..............................

39. பற்சில்லுகளின் உதவியுடன் இயங்கும் பொருட்கள்.

i. மோட்டார் வண்டி
ii. மாட்டு வண்டி
iii. வானொலி

40. அரச இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள இடம்.

i. வாகனங்களின் இலக்கத் தகடு
ii. இலங்கை வங்கி
iii. கொப்பி

41. இலங்கையில் சனத்தொகை கூடிய மாவட்டங்கள்.

i. கொழும்பு, கண்டி
ii. காலி, பதுளை
iii. யாழ்ப்பாணம், கண்டி

42. குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளத்தக்க சேவை.

i. தேசிய அடையாள அட்டை
ii. கடவுச் சீட்டுப் பெறல்
iii. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறல்

43. காசுக்கட்டளை ஒன்றை அனுப்பவும் அதனை மாற்றிப் பணம் பெறவும் செல்ல வேண்டிய இடம்.

i. தபாலகம் ii. வங்கி
iii. மக்கள் வங்கி

44. இப்படத்தில் காட்டப்படுவது.



i. குப்பைவாரியினால் குப்பை புரட்டுதல்.
ii. முன்னால் மனிதன் வேலை செய்கின்றான்.
iii. தடியைப் பாவித்து கல்லொன்றைபுரட்டுதல்.

45. இவ்வுபகரணத்தைப் பயன்படுத்துவது.

i. மேசன் தொழில்
ii. தச்சன் தொழில்
iii. விவசாயம்

46. இப்படத்தின் குறியீடு குறிப்பது.

i. வளைவு முன்னால்
ii. சுற்று வட்டம்
iii. முன்னால் செல்லவும்

47. இலக்கக் கடிகாரம் ஒன்றில் பின்வரும் முறையில் நிமிடம், மணித்தியாலம் காட்டப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் இன்னும் 1 நிமிடத்தில் காணப்படும் நேரம்.

23:59

i. 24:00 ii 00:00 iii. 12:00

48. எமது நாட்டில் நித்தமும் வெள்ளப் பெருக்கு ஏற்படும் நகரம்.

i. கொழும்பு ii. இரத்தினபுரி
iii. கண்டி

49. நெத்தலியில் உள்ள மிக முக்கியமான போசனை.

i. கொழுப்பு ii கல்சியம்
iii. காபோவைதரேற்று

50. நீராவியில் அவித்து உண்ணும் உணவு அல்லாதது எது?

i. ரொட்டி ii. பிட்டு
iii. இடியப்பம்

பின்வருவனவற்றுள் நிகழ்கால வாக்கியம்

51. i. தந்தை மகனை அழைத்துச் செல்கிறார்.
ii. தவளை குளத்தினுள் குதித்தது.
iii. நாம் விரைந்து செல்வோம்.

52. i. வறுமையிலும் செம்மையாக வாழ்கின்றோம்.
ii. குரங்குகள் கிளைக்குக் கிளை பாய்ந்து திரியும்.
iii. மாலுமி கப்பலை வேகமாக செலுத்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Welcome to the United Nations. It's your world.   Search UN Website

العربية 中文 English Français Русский Español

World Press Freedom Day
3 May

கருத்துச் சுதந்திரம் என்பது எமது விலைமதிப்பற்ற உரிமை. இது ஏனைய அனைத்து சுதந்திரத்தோடும் பின்னிப் பிணைந்துள்ளது. மேலும் இது மனித கௌரவத்திற்கான அடிப்படையை வழங்குகிறது. சுதந்திரமான பன்மைத்துவ ஊடகம் என்பது இதனை பயன்படுத்துவதற்கான அடிப்படையாகும்.

—ஐ.நா. செயலாளர் பாங் கீ மூன்

2013ம் ஆண்டுக்கான கருப்பொருள்

பேசுவதற்கான பாதுகாப்பு: அனைத்து ஊடகங்களிலும் கருத்துச் சுதந்திரத்தை பாதுகாத்தல்

உலக ஊடக சுதந்திர தினம் 2013ம் ஆண்டுடன் 20 வருட பூர்த்தியைக் கொண்டாடுகிறது. 1993 டிசம்பர் மாதம் ஐ.நா. பொதுக் கூட்டத்தில் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் மூலம்

- ஊடக சுதந்திரத்தின் அடிப்படைகள் நினைவுகூரப்படுகின்றன.
- உலகில் ஊடக சுதந்திரம் மதிப்பிடப்படுகிறது.
- ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்படுகிறது.
- ஊடகக் கடமையில் ஈடுபடும்போது இழப்புகளை சந்திக்கும் ஊடகவியலாளர்களுக்கு காணிக்கை செலுத்தப்படுகிறது.

Reeyot Alemu 2013 ஆண்டுக்கான UNESCOவின் Guillermo Cano உலக ஊடக சுதந்திர விருதை வென்றார்.

SAFE TO SPEAK:
SECURING FREEDOM OF EXPRESSION IN ALL MEDIA

WORLD PRESS FREEDOM DAY
SAN JOSÉ, COSTA RICA
2-4 MAY 2013

United Nations Educational, Scientific and Cultural Organization

World Press Freedom Day

facebook இல் Like செய்யுங்கள்...
www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013ஆம் ஆண்டிற்கான புதிய வெளியீடுகள்

எதிர்பாருங்கள்! இஸ்லாமிக் புக் ஹவுஸின் (G.C.E. O/L) மாணவர்களுக்கான

கடந்த கால வினாப்பத்திரம் (Passpaper) (விடைகளுடன்)



Rs: 280.00



Rs: 260.00



Rs: 280.00

Rs: 300.00



Rs: 200.00

Rs: 280.00



Rs: 280.00



Rs: 250.00



Rs: 300.00

Rs: 980.00



Rs: 260.00

புள்ளியிடல் திட்டத்திற்கு அமைய சுய கற்றல் வழிகாட்டி நூல்கள்

77, Dematagoda Road, Colombo 09.

Tel: 0112684851, Fax: 0112688102 Web: www.ibh.lk

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org